பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 05 சனிக்கிழமை (20-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:361

# வல்வை சிதம்பரா மைதானத்தில் இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை!

## மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதபாணிகள் கொடூரம்

கரவெட்டி,நவம்பர்20

**வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது நேற்று மாலை இனந்தெரியாத நபர்கள் இயந்திரத் துப்பாக்கிகொண்டு நடத்திய கொடூரத் தாக்குதலில் இளைஞர்களில் இருவர் துடிதுடித்துப் பலியாகினர். மற்றொருவர் படுகாய மடைந்திருக்கிறார்.**

**மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே ரீ-56 ரக துப்பாக்கியால் இளைஞர்களை நோக்கிச் சரமாரியாகச் சுட்டுவிட்டுத் தப்பி ஓடினர் என்று கூறப்படுகிறது.**

வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடியைச் சேர்ந்த இரு இளைஞர்களே உயிரிழந்திருக்கின்றனர்.

சிதம்பரா மைதானத்தில் மாலை நேரங்களில் இளைஞர்கள் பலர் கூடி விளையாடுவது வழக்கம். நேற்றும் பல இளைஞர்கள் ஒன்று கூடி உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டிருந்தவேளை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் தலைக்கவசம் மற்றும் 'ஜக்கெட்' அணிந்து இனங்காண முடியாத தோற்றத்தில் வந்தவர்கள் எனக் கூறப்படும் இருவர் மைதானத்தின் அருகே மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு திடீரென இயந்திரத் துப்பாக்கியை வெளியே எடுத்துச் சரமாரியாகச் சுட்டனர் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

மைதானப் பகுதி திடீரென வேட்டுச் சத்தங்களால் அதிர்ந்தது. விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் அங்கும் இங்குமாகத் தலை தெறிக்க ஓடினர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இன்று பூரண ஹர்த்தாலுக்கு பொது அமைப்புக்கள் அழைப்பு

யாழ்ப்பாணம்,நவ.20

வல்வெட்டித்துறையில் நேற்று நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று குடாநாடு முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டிருக்கிறது.

இது தொடர்பாக பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று நள்ளிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வலவெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் நேற்று மாலை விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது மோட்டார் சைக்கிளில் இராணுவப் பின்னணியுடன் வந்தவர்கள் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அப்பாவி இளைஞர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவத்தை யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதுடன் தனது எதிர்ப்பையும் தெரிவிக்கின்றது.

அப்பாவி இளைஞர்கள் மீதான துப்பாக்கிச் சூடு ஒரு திட்டமிட்ட செயற்பாடே. இவ்வாறான படுகொலைகளை மேற்கொண்டு சமாதான முயற்சிகளைக் குழப்பி இந்நாட்டில் மீண்டுமொரு இரத்தக்களரியை ஏற்படுத்துவதே இராணுவத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் தின எழுச்சியைக் குலைக்க திட்டமிட்டு நடத்திய தாக்குதல் இது

### வல்வைச் சம்பவத்திற்கு பொது அமைப்புகள் கண்டனம்

யாழ்ப்பாணம்,நவ.20

வல்வை சிதம்பரா மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலைப் பொது அமைப்புக்கள் பலவும் வன்மையாகக் கண்டித்திருக்கின்றன.

இந்தத் தாக்குதல் மிகக் கொடூரமானது; மிலேச்சத்தனமானது என்று அந்த அமைப்புகள் தெரிவித்திருக்கின்றன.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உட்பட பல அமைப்புகள் நேற்றிரவு அறிக்கைகள் விடுத்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாள் மற்றும் மாவீரர் தினம் என்பனவற்றைப் பேரெழுச்சியுடன் கொண்டாடுவதற்கு மக்கள் தயாராகிவரும் சமயத்தில் மக்களின் எழுச்சியைக் குலைப்பதற்காகத் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு தாக்குதல் இது என்றும் பல அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியிருக்கின்றன.

இந்தத் தாக்குதலுக்கு கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்துவதற்காக யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் இன்று பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளது.

மினிபஸ் போக்குவரத்துச் சேவைகள் இன்று நடைபெறமாட்டாது என்று சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையச் செயலாளர் சேரன் சிவராஜா தெரிவித்திருக்கிறார்.

இணையத்தின் ஏற்பாட்டில் இன்று நல்லூரில் இருந்து ஆரம்பமாக இருந்த சைக்கிள் ஓட்டப்போட்டி நாளைய தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-12)

## யாழ்.மாவட்ட அரசியல்துறையும் கண்டனம் தெரிவித்து அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.20

வல்வை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் அப்பாவி இளைஞர்கள் இருவர் ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை வன்மையாகக் கண்டிக்கிறது.

கண்டனத்தைத் தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நேற்று நள்ளிரவு விடுத்தார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நேற்று மாலை 6 மணியளவில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த அப்பாவி இளைஞர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வந்து தரித்துநின்ற தலைக்கவசமும் 'ஜக்கெற்றும்' முகத்திற்கு கறுப்பு துணியும் அணிந்த இருவர் ஏ.கேரக துப்பாக்கியை எடுத்து சரமாரியாக கண்மூடித்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரண்டு அப்பாவி இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். குடும்பஸ்தர் ஒருவரும் படுகாயமடைந்துள்ளார். இந்த அப்பாவி இளைஞர்கள் மீதான படுகொலைச் சம்பவத்தை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த அப்பாவி இளைஞர்கள் மீதான

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி வாரம் நாளை ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம்,நவ.20

எதிர்வரும் 27ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் மாவீரர் தினத்துக்கு முன்னோடியாக மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் நாளை உணர்வு பூர்வமாக ஆரம்பமாகவுள்ளன.

குடாநாட்டில் கோப்பாய், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் நாளை காலை விசேட நிகழ்வுகள் இடம் பெறும்.

பொது அமைப்புக்களின் அலுவலகங்கள், அரச, அரச சார்பற்ற திணைக்களங்கள் ஆகியவற்றிலும் தேசியக் கொடியேற்றி, மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலிகளும் இடம்பெறும்.

மாவீரர் நாளை எழுச்சியுடன் கொண்டாடும் வகையில் வீதிகள் மஞ்சள், சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. பிரதான வீதிகளின் சந்திகளில் அலங்கார வளைவுகள் நிறுவப்பட்டுள்ளன. பதாகைகளும் தொங்கவிடப்பட்டுள்ளன.

நாளைமுதல் தொடர்ந்து நான்கு தினங்களுக்கு சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மேல் நீதிமன்றத்தில் ஜூரி சபை முன் வழக்கு

வட்டுக்கோட்டைப் பகுதியில் 1996ஆம் ஆண்டு குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 22ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றில் ஜூரி சபையினர் முன்னிலையில் இடம்பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை தெற்கைச் சேர்ந்த சின்னவன் முருகேசன் என்பவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அதே இடத்தைச் சேர்ந்தவர்களான சிவசுப்பிரமணியம் தவராசா, கணபதிராசன் மற்றும் கணேசன் அஜித் ஆகிய மூவருக்கும் எதிராக யாழ். மேல்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளே எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி கே.பி.எஸ். வரதராசா முன்னிலையில் ஜூரி சபையினர் முன் நடைபெறவுள்ளன.

சுமார் 20 வருடங்களுக்குப் பின்னர் ஜூரி சபையினர் முன்பாக யாழ். மேல் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## விளையாட்டுத்துறை கண்டனம்

யாழ்ப்பாணம்,நவ.20

வல்வை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், விளையாட்டுத்துறைக்கு எதிராக விடுக்கப்பட்ட சவால் என்று தமிழீழ விளையாட்டுத்துறை தெரிவித்திருக்கின்றது.

உத்வேகத்துடன் வளர்ச்சிபெற்றுவரும் விளையாட்டுத்துறையை ஆயுதம் கொண்டு அடக்க எடுக்கப்பட்ட முயற்சி இது.

படுகொலைகள் மூலம் கிழக்கில் உருவாக்கப்பட்டிருக்கும் குழப்பமான சூழ்நிலையை குடாநாட்டிலும் ஏற்படுத்த சில சக்திகள் முயற்சிக்கின்றன. இந்தத் தாக்குதல் இதனை வெளிப்படுத்துகின்றது என்று தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார்.

நேற்றைய சம்பவத்தில் உயிரிழந்த இளைஞர்கள் இருவரினதும் குடும்பங்களுக்கு விளையாட்டுத்துறை தனது அனுதாபத்தைத் தெரிவித்திருக்கின்றது. (ஐ-12)

**சுயநோக்கு அரசியல் நகர்வுகளுக்கு மேலாக**

# இனப்பிரச்சினைக்கு முன்னுரிமை தந்து செயற்படுவதற்கு ஜனாதிபதி தயாரா?

## நேரடியாகக் கேட்கிறது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு,நவம்பர்20

**"காலத்தை இழுத்தடிக்காமல் இந்த மாதத்திற்குள் பேச்சை ஆரம்பிக்கப் புலிகள் தயாரா?' - என்று கேள்வி எழுப்பியுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நோக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதில் கேள்வி தொடுத்திருக்கின்றது.**

**'அரசியல் சுயலாபத்துக்காக அரசமைப்பை மாற்றும் முயற்சிக்கு மேலாக, நாட்டின் மிக முக்கியமான தேசியப் பிரச்சினைக்கு முன்னுரிமைகொடுத்துச் செயற்பட ஜனாதிபதி தயாரா? - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியை எதிர்த்துக் கேள்வி எழுப்பியிருக்கின்றது.**

இதுதொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜனாதிபதி சந்திரிகா பண்டரநாயக்க குமாரதுங்க சமாதானப் பேச்சுக்கள் குறித்து ஐ.ரி.என். தொலைக்காட்சிக்கும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கும் அளித்த பேட்டியில் தெரிவித்த கருத்துக்களுக்கு பொதுஜன தொடர்புகள் சாதனங்கள் முக்கியத்தும் கொடுத்துள்ளன. ஜனாதிபதியின் இக்கருத்துக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு பரிசீலனை செய்தது.

சமாதானப் பேச்சுத் தொடர்பான பார்வையை, தனது அரசினுள் நிலவும் முரண்பாடுகள் மற்றும் முன்னுக்குப்பின் முரணான நிலைப்பாடு ஆகியவற்றிலிருந்து திசைதிருப்பவும், சமாதான நடைமுறையின் உண்மையான நிலைப்பாடு தொடர்பாக பொதுமக்களையும், சர்வதேச சமூகத்தையும் குழப்பத்திலாழ்த்தவும் தாம் வெளியிட்ட இக்கருத்துக்கள் மூலம் ஜனாதிபதி முயற்சித்துள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிக்கின்றது. இவ்வாறு செய்வதன் மூலம் தான் தனது சொந்த நிகழ்ச்சி நிரலின்படி செயலாற்றமுடியும் என்று ஜனாதிபதி நம்புகின்றார் போல் தெரிகின்றது.

சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து இரு பிரதான கட்சிகளும் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும்) ஒருமித்த கருத்தையே கொண்டிருப்பதாக ஜனாதிபதி கூறிக்கொள்கின்றார்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை தாமதமின்றி அரசு ஆரம்பிக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி பகிரங்கமாகத் திரும்பத் திரும்ப தெரிவித்துவந்துள்ளது. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவு அடிப்படையில் மாத்திரம் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாகத் தனிப்பட்டமுறையில் ஜூன் 10ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கூறியுள்ளார் ஜனாதிபதி. அவ்வாறான செய்தி ஒன்றை விடுதலைப் புலிகளுக்கு நோர்வே அனுசரணையாளர்கள் மூலம் அனுப்பவில்லை.

நவம்பவர் 10 ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்திய நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன், மறுநாள் நவம்பர் 11ஆம் திகதி விடுதலைப் புலிகள் தலைமைத்துவத்தைச் சந்தித்துப் பேசியபோது, அவ்வாறான செய்தி எதையும் விடுதலைப் புலிகளுக்குக் கொண்டுசெல்லவில்லை என்பதை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு நவம்பர் 16ஆம் திகதி விடுதலைப் புலிகள் அரசியல் தலைமைத்துவத்துடன் இது தொடர்பாக கலந்துரையாடியபோது தெளிவாக அறியக்கூடியதாகவிருந்தது.

சமாதானத்திற்கும், நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைச்சபைக் கூட்டங்களில் தாம் பங்குபற்றுவதில்லை என்ற தீர்மானத்தை எடுத்ததற்காக ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த காரணங்களில் ஒன்று, வேறு எந்த நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாக, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவின் அடிப்படையில் முதலில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்பதுதான்.

இச்சூழ்நிலையில், சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக இரு பிரதான கட்சிகளும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருப்பதாக ஜனாதிபதி கூறிக்கொள்வது தவறான நிலைப்பாடாகும்.

கலந்துரையாடல் மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்றும், இப்பிரச்சினைக்கு ஏதோ ஒரு வகையான அதிகாரப் பகிர்வே தீர்வாக அமையவேண்டும் என்பதையும் ஜே.வி.பி. ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி கூறிக்கொள்கின்றார். ஆகவே, அதிகாரப்பகிர்வின் தன்மை மற்றும் கட்டமைப்புப் பற்றித் தீர்மானிப்பதற்கு சமாதானப் பேச்சை ஆரம்பிக்கப்பட வேண்டும். ஜே.வி.பியினர் ஏற்றுக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவிக்கும் ஏதோ ஒரு வகையான அதிகாரப் பகிர்வு தமிழ்த் தேசியத்தால் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை முதலில் நாங்கள் கூறிவைக்கவிரும்புகிறோம்.

அதிகாரப் பகிர்வை அல்ல, அதிகாரப் பரவலாக்கலையே தாம் ஆதரிப்பதாகவும் -

விடுதலைப் புலிகளுடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதை முற்றாக எதிர்ப்பதாகவும் -

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கு முன்வந்ததாலேயே ஐக்கிய தேசிய முன்னணி அரசு கவிழ்க்கப்பட்டதாகவும் -

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிப்பின் தற்போதைய அரசையும் கவிழ்ப்போம் எனவும் -

ஜே.வி.பி. பகிரங்கமாக அறிவித்துள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அரசு தயாராக இருப்பதாகக் கூறும் செய்தியை நோர்வே வெளிவிவகார அமைச்சர் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பக்கூடாது என்று ஜே.வி.பியினர் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் -

அவ்வாறான செய்தி அனுப்பப்பட்டால் அரசை கவிழ்ப்பது என்று ஜே.வி.பியின் மத்திய செயற்குழு முடிவெடுத்ததாகவும் -

பொதுசன ஊடகங்கள் பரவலாக செய்திகளை வெளியிட்டிருந்தன.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவு அடிப்படையில் பேச்சை ஆரம்பிப்பதற்கு எதிராகப் பிரசார இயக்கத்தை நடத்துவதற்குத் தேவையான நிதியைச் சேகரிப்பதற்காக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்றக் குழுவின் தலைவரும் தேசப்பற்று இயக்கத்தின் உறுப்பினர்களுடன் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருப்பதாகவும் பொதுசன தொடர்பு சாதனங்கள் தெரிவித்துள்ளன.

மேற்கூறப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் ஜே.வி.பி. பற்றி ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்துக்கள் உண்மை நிலைப்பாட்டை பிரதிபலிக்கவில்லை.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவு அடிப்படையில் பேச்சு ஆரம்பமான பின்னர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவு தொடர்பாக மேலும் முன்மொழிவுகளை அரசு பேச்சு மேசையில் முன்வைக்கமுடியும் என்றும் -

அவற்றைப் பரிசீலனை செய்யமுடியும் என்றும் -

விடுதலைப் புலிகள் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றனர்.

இதனை விடுதலைப் புலிகள் அரசிற்கு நோர்வே அனுசரணையாளர்களூடாக அனுசரணையாளர்களுடன் கடைசியாக இரு சுற்றுப் பேச்சுக்களை நடத்திய பின்னர், தெளிவாக அறிவித்துள்ளதுடன், இதனைப் பகிரங்க அறிக்கைகள் மூலமும் வெளிப்படுத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் இந்நிலைப்பாடே பொதுசன ஊடகங்களில் விரிவாக விளம்பரப் படுத்தப்பட்டிருந்தது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பு நிறுவப்பட்ட பின்னர் இறுதித்தீர்வு பற்றிக் கலந்துரையாடலாம் என்று விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் மீண்டும் தங்கள் உறுதிப்பாட்டை வலியுறுத்தியுள்ளனர். உண்மையில் இது தொடர்பான ஆணை கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டது.

ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அரசியல் தீர்வு காணப்படுவது தொடர்பாக பல தசாப்தங்களாக, பல தடவைகள் தமிழ்த் தேசிய இனம் ஏமாற்றப்பட்டுவந்துள்ளது. மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்களை ஏமாற்றமுடியாது.

அரசுக்குள் நிலவும் இன்னும் ஒரு முன்னுக்குப் பின் முரணான நிலை என்னவென்றால், ஏதும் ஒரு வகையில் சுய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய சில அம்சங்களைக் கொண்ட அரசமைப்புச் சீர்திருத்தத்தை முன்னெடுத்துச் சென்றது. சாதாரண பெரும்பான்மையைக் கூட நாடாளுமன்றத்தில் பெறுவதற்கு ஜே.வி.பியின் ஆதரவு அரசிற்குத் தவிர்க்கமுடியாத தேவையாக உள்ளது. அரசு முக்கியமாகக் கருதும் இந்த அரசமைப்புச் சீர்திருத்தம் குறித்த அரசியல் யதார்த்த நிலையைப் பார்க்குமிடத்து, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவின் அடிப்படையில் பேச்சை நடத்திக் கொண்டு, அவ்வாறான நிகழ்ச்சி நிரலை ஒருமித்த நேரத்தில் அரசினால் நடைமுறைப்படுத்த முடியாது.

இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படாத நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குத் தயாரா என்பதை இம்மாத முடிவினுள் அறிவிக்கும்படி விடுதலைப் புலிகளைக் கோருவதை விடுத்து இடைக்காலத் தன்காட்சி அதிகார சபை முன்மொழிவின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் -

அவ்வாறான பேச்சை ஆரம்பித்ததும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவு தொடர்பாக அரசு பேச்சுமேசையில் முன்வைக்கும் ஏனைய முன்மொழிவுகள் தொடர்பாகவும் பேச்சை நடத்துவதற்கும் -

அரசு தயாராகவிருக்கின்றது என்பதை கூடிய விரைவில் ஜனாதிபதி புலிகளுக்கு அறிவிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்புக் கேட்டுக்கொள்கின்றது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் காணப்படும் உடன்பாட்டுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி உறுதியளித்துள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான அரசியல் கட்சிகளும் அவ்வாறான உடன்பாட்டை ஆதரிக்கும். உண்மையில் அரசிற்கு நாடாளுமன்றதத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையும் உறுதிசெய்யப்படும்.

இப்போது எழுகின்ற கேள்வி, 'சுய தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய அரசமைப்பு சீர்திருத்தத்துக்கு மேலாக நாட்டின் மிக முக்கியமான தேசியப் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுவதற்கு ஜனாதிபதி தயாராக இருக்கிறாரா? என்பதுதான். - என்றுள்ளது. (ஐ-க)




யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் விஞ்ஞானபீடாதிபதி பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரனின் நினைவுப் பேருரை யாழ். பல்கலைக்கழக இரசாயனத்துறை விரிவுரை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

'இலங்கையில் மூன்றாம் நிலைக் கல்வி நிலை' என்ற தலைப்பில் இலங்கை திறந்த பல்கலைக்கழக இரசாயனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் ஜே.என்.ஒலிவ் பெர்னாண்டோ நினைவுரையாற்றுவதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள் : வசந்தன்)*

## மாவீரர் தின ஏற்பாட்டுக் குழுவினரின் ஒன்றுகூடல்

கரவெட்டி,நவ.20

வடமராட்சி மாவீரர் தின ஏற்பாட்டுக் குழுவினரின் ஒன்றுகூடல் எள்ளன்குளம் துயிலும் இல்லப் பணிமனையில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

அனைத்து அங்கத்தவர்களையும் அங்கு வருகைதருமாறு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-70)

## ஈரானிய திரைப்படக் காட்சி

கரவெட்டி,நவ.20

யாழ். பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் 'அப்பிள்' எனும் ஈரானிய மொழித் திரைப்படம் ஆங்கில துணைத் தலைப்புக்களுடன் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

## ஈச்சமோட்டைப் பகுதியில் மைதானத்தில் வெள்ளம்

அரியாலை,நவ.20

ஈச்சமோட்டை வண்ணான்குளத்திலிருந்து கடலுக்கு நீரை வெளியேற்றும் வடிகாலில் வெள்ளம் தேங்கியுள்ளது.

இந்த வடிகால் உரிய முறைப்படி புனரமைக்கப்படாததால் மழை வெள்ளம் கடலுக்கு வழிந்தோடுவது தடைப்பட்டிருக்கிறது. இதனால் குளத்துக்கு அருகே உள்ள விளையாட்டு மைதானத்திலும் வெள்ளம் தேங்கியுள் ளது.

இதேவேளை -

இந்த வடிகால் பகுதியில் குப்பைகள் மற்றும் கழிவுகளைக் கொட்டவேண்டாம் என்று ஈச்சமோட்டை சனசமூக நிலைய நிர்வாகம் அப்பகுதி மக்களைக் கேட்டிருக்கிறது.(ஐ-17)

## மாவீரர் நாள் - 27

**புயலாக எழுந்த பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள இரும்பை ஒத்த மனவுறுதி எமக்குத் தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எமக்குப் பக்கபலமாக மனித மலைகளாக உறுதியோடு நின்ற மாவீரர்களை, நாம் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நின்றன.**

**- தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன்.**

## சுவிஸ் திரைப்பட விழாவின் இறுதிநாள் இன்று

கடந்த புதன்கிழமை கலைப்பீடத்தின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் ஆரம்பமான சுவிஸ் திரைப்படவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன.

இன்று சனிக்கிழமை மூன்று காட்சிகளாக வெவ்வேறு திரைப்படங்கள் காண்பிக்கப்படவுள்ளன.

அந்தவகையில் முற்பகல் 10.30 மணிக்குக் பக் போர் மோர் (Back For More), பிற்பகல் 2.30மணிக்கு உரோபியா புளூஸ்(Utopia Blues), மாலை 4.30 மணிக்கு எஸ்கேப் ரு பரடைஸ் (Escape to Paradise) ஆகிய திரைப்படங்கள் ஆங்கில உப தலைப்புக்களுடன் இன்று கைலாசபதியரங்கில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (ஐ-12)



லண்டனில் வெளியுறவு அலுவலகத்தில் அளிக்கப்பட்ட இராணுவ மரியாதையை ஏற்றுக் கொள்ளும் பிரான்ஸ் அதிபர் ஜக் ஷிராக் மற்றும் ஜரிஷ் அதிபர் எடின்பரோ.

# பலஸ்தீன மக்களுக்கு அமெரிக்கா நிதியுதவி

வாஷிங்டன்,நவ.20

பலஸ்தீன மக்களுக்குச் சுமார் 200 கோடி ரூபா (இலங்கை நாணயப்படி) நிதியுதவியை நேரடியாக வழங்க அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் நிர்வாகம் முடிவுசெய்துள்ளது.

பலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சினையைத் தீர்க்க அமெரிக்கா பெரும் ஆர்வம்காட்டி வருகிறது. இரு நாடுகளுக்கிடையிலும் அமைதியை - சமாதானத்தை - ஏற்படுத்த அமெரிக்க ஜனாதிபதி புஷ் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். அதன் ஒரு பங்காகவே இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது.

அமெரிக்காவில் வழங்கப்படும் மேற்படி நிதியுதவி இஸ்ரேல் - பலஸ்தீனங்களுக்கிடையிலான அமைதிச் சூழ்நிலைக்குப் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்திற்கு நிதி திரட்டும் நடவடிக்கையிலும் புஷ் நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. இதற்காகத் தனது நேசநாடுகளிடம் அமெரிக்க அரசு நிதியுதவிகளைக் கேட்டுள்ளது.

யஸீர் அரபாத்தின் மறைவையடுத்துப் பலஸ்தீனத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தல் நடவடிக்கைகளுக்கு உதவியளிக்கவும் புஷ் தீர்மானித்துள்ளார்.

பலஸ்தீனத்திற்கு வழங்கப்படும் நிதிக்கு அந்நாட்டு நிதியமைச்சர் சலாம் பயத் பொறுப்பு வகிப்பார் என்று அமெரிக்க அதிகாரிகள் நேற்றுமுன்தினம் அறிவித்தனர். (க-3)

# மூன்று நாள்கள் பொலீஸ் காவலில் வைத்து ஜெயேந்திரரை விசாரிக்க நீதிமன்று உத்தரவு

காஞ்சிபுரம்,நவ.20

காஞ்சிமட சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் சுவாமிகளை மூன்று நாள்கள் பொலீஸாரின் தடுப்புக் காவலில் விசாரணை செய்ய காஞ்சிபுரம் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இதுகுறித்து விசாரணை நேற்றுமுன்தினம் காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்கான தீர்ப்பை நீதிபதி உத்தமராஜ் நேற்று வெளியிட்டார்.

அவர் வெளியிட்ட தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கோயில் அதிகாரியின் கொலை வழக்குத் தொடர்பான டயரி மற்றும் ஆவணங்களைக் கொண்டே ஜெயேந்திரரை பொலீஸாரின் தடுப்புக் காவலில் விசாரணை செய்வதற்கு அனுமதிக்க போதுமான காரணங்கள் இருக்கின்றன. நீதிமன்ற விசாரணையைத் தொடர்ந்து ஜெயேந்திரர் சுவாமிகளை பொலீஸாரின் காவலில் அனுமதிக்க வேண்டியது அவசியமாகும். எனவே, நேற்று அதாவது வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.05 மணியிலிருந்து எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10.30 மணிவரையிலான மூன்று நாள்களுக்கு ஜெயேந்திரரை பொலீஸாரின் தடுப்புக்காவலில் விசாரணை செய்ய அனுமதியளிக்கப்படுகிறது.

உலக அரங்கில்

விசாரணைகள் முடிந்த பிறகு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு மீண்டும் ஜெயேந்திரரை காஞ்சிபுரம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும் என்றுள்ளது.

ஜெயேந்திரரை விசாரணை செய்யும் காலத்தில் 2 நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

- ஜெயேந்திரருக்கு தினமும் ஒரு மருத்துவக்குழு மூலம் உடல்நலப் பரிசோதனை நடத்தப்படல் வேண்டும்.
- ஜெயேந்திரர் குறிப்பில் ஒருவரைத் தினமும் ஒரு மணி நேரம் அதாவது மாலை 6 மணிமுதல் 7 மணி வரை சந்தித்து சட்ட ஆலோசனைகளை வழங்க பொலீஸார் அனுமதிக்க வேண்டும் என்பதே தீர்ப்பில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளாகும்.

நீதிபதியின் தீர்ப்பு வாசிக்கப்பட்ட பின்னர், ஜெயேந்திரா சார்பாக வாதாடிய வழக்கறிஞர்கள் எழுந்து "பொலீஸாரின் தடுப்புக் காவலில் ஜெயேந்திரர் விசாரிக்கப்படும் இம்மூன்று நாள்களில் அவர் தினசரி பூஜைக்கு பொருள்களை வழங்க உத்தரவிடவேண்டும்" - என்று கோரிக்கை விடுத்தனர்.

ஆனால், அதனை நீதிபதி ஏற்க மறுத்துவிட்டார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை வேறொரு நீதிமன்றத்தில் நடந்து வருவதால் இதில் தான் கருத்துத் தெரிவிக்கவோ, தீர்ப்பு வழங்கவோ முடியாது என நீதிபதி உத்தமராஜ் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஜெயேந்திரர் விசேட பொலீஸ் பிரிவினரால் காஞ்சிபுரம் மாவட்ட பொலீஸ் தலைமை அலுவலக வளாகத்தில் உள்ள மகளிர் காவல் நிலைய கட்டடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவருக்கு மருத்துவப் பரிசோதனை நடந்தது. பின்னர், முதற்கட்ட விசாரணைகள் ஆரம்பித்தது. ஜெயேந்திரரைப் பார்வையிட நேற்றும் சங்கரமட நிர்வாகிகள் எவரும் நீதிமன்றத்திற்கு சமுகமளித்திருக்கவில்லை. (க-3)



வேலூர் சிறைச்சாலையிலிருந்து காஞ்சிப்பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகள் காஞ்சிபுரம் நீதிமன்றத்துக்குப் பொலீஸாரால் அழைத்துவரப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

# ஆப்கானில் போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் நில அளவு அதிகரிப்பு

ஆப்கானிஸ்தானில் 'ஓபியம்' போதைப்பொருளகளின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் நிலத்தின் அளவு மூன்றில் இரண்டு பங்கால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்த போதைப் பொருள் வணிகத்தின் அதிகரிப்பு நாட்டில் ஜனநாயகத்தையும், ஸ்திரத்தன்மையையும், புனரமைப்பையும் நிர்மூலம் செய்துவிடும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

தனது மொத்த பொருளாதாரத்திற்கும் இந்தப் போதைப்பொருள் உற்பத்தியை நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆப்கானிஸ்தான தள்ளப்படலாம் என ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களுக்கான கட்டுப்பாட்டுப் பிரிவின் இயக்குநர் கூறியுள்ளார்.

போதைப்பொருள் தயாரிப்புக்கும், பயங்கரவாதத்திற்கும் இடையிலான தொடர்பு குறித்து பிரிட்டனும், அமெரிக்காவும் அடிக்கடி பேசிவந்துள்ளன.

ஆப்கானிஸ்தான் உலகின் பெரிய போதைப் பொருள் தயாரிக்கும் நாடு என்ற தனது நிலையை மீண்டும் பெற்றுவிட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை கூறுகிறது. தலிபான் தனது ஆட்சிக்காலத்தின் இறுதியில் அபின் பெற்றுக்கொள்ளப்படும் 'கசகசா' செடிகளின் பயிரீட்டை அழிக்க முயற்சி செய்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய ஹமீத் கர்சாய் தலைமையிலான அரசும் இப் போதைப்பொருளை அழிக்க உறுதிகூறியுள்ளது. (க-3)

# ஈராக்கின் பலூஜா சண்டையில் பொதுமக்கள் பலர் சிக்கினர்?

பலூஜா,நவ.20

ஈராக்கின் பலூஜா நகரைக் கைப்பற்றுவதற்கான தாக்குதலை அமெரிக்கப் படையினர் ஆரம்பித்து 10 நாள்களின் பின்னர், அந்நகரில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தொடரும் சண்டையில் அகப்பட்டிருக்கலாம் என கவலை தெரிவிககப்படுகிறது.

இந்நகரில் தங்கியிருப்பவர்களின் நிலைமை குறித்து சுயாதீனமான கணிப்பீடு ஒன்று நடத்தப்படவேண்டுமென செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் கூறியுள்ளனர். பலூஜாவில் தற்போது நீரோ, மின்சாரமோ கிடையாது எனவும் செஞ்சிலுவைக குழு மேலும் தெரிவித்துள்ளது.

நகருக்கு நீர் விநியோகிக்கும் முக்கிய தாங்கி அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. வெகுவிரைவில் மீண்டும் நகருக்கான நீர் விநியோகம் ஆரம்பிக்கப்படலாம் என செஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நகரில் தொடர்ந்தும் சண்டை இடம்பெறுவதால் காயமடைந்தவர்கள் இன்னமும் மருத்துவ வசதிகளை அணுக முடியாமல் சிக்கியிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலூஜா நகரின் பராமரிப்பைத் தம்மாலேயே மேற்கொள்ளமுடியுமென அமெரிக்கப் படையினர் வலியுறுத்தி வருகின்றனர் என செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார். (க-3)

# கராச்சி கார் குண்டுவெடிப்பு: வழக்கின் குற்றவாளி கைது!

கராச்சியில் நடந்த கார்க்குண்டுவெடிப்பு வழக்கில் தொடர்புடைய ஹர்கத் உல் முஜாகிதீன் தீவிரவாதியை பொலீஸார் கைதுசெய்தனர்.

கராச்சியில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதரகம் அருகே கடந்த 2002 இல் கார்க் குண்டு வெடித்தது. இதில் ஒரு பொலீஸார் உட்பட 12 பேர் பலியாகினர். இந்த வழக்கில் ஏற்கனவே கைதான நான்கு பேரில் இருவருக்கு மரணதண்டனையும் மற்றவர்களுக்கு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஹர்கத் உல் முஜாகிதீன் இயக்கத்தைச் சேர்ந்த ராணா நவீத் உல் ஹசன் என்ற தீவிரவாதியைப் பாகிஸ்தான் பொலீஸார் கைதுசெய்தனர். பாகிஸ்தானில் உள்ள வாகா நகரில் அவர் ஜவுளி வியாபாரியாக இருந்தார். தீவிர கண்காணிப்புக்குப் பிறகு கைது செய்யப்பட்டார்.

அமெரிக்கப் பத்திரிகையாளர் டானியல் பேர்ள் என்பவரைக் கடந்த 2002 இல் தீவிரவாதிகள் கடத்திச் சென்று கொலைசெய்தனர். இந்த வழக்கில் தேடப்பட்ட ஆசிம் கபூர் என்ற தீவிரவாதியைப் பொலீஸார் சுட்டுக்கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# சூடான் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர அவசரமாகத் தீர்வு காணப்படல் வேண்டும்

## ஐ.நா.செயலாளர் அனான் தெரிவிப்பு

நைரோபி,நவ.20

தெற்கு சூடானில் நீண்டகாலமாக நடைபெற்றுவரும் உள்நாட்டுப்போரை முடிவுக்குக்கொண்டு வருவதற்கு காலத்தை வீணாக்காமல் விரைவில் தீர்வு காணப்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் கூறியுள்ளார்.

அங்கு ஏற்படக்கூடிய ஒரு சமாதான உடன்படிக்கை மேற்கு சூடானில் தார்பூர் பிரதேசத்தில் நிலவும் நெருக்கடி நிலைகளைத் தீர்க்க உதவும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆபிரிக்காவில் இடம்பெறும் இரண்டாவது மிகப்பெரிய சமாதானப் பேச்சுக்கான பாதுகாப்புச்சபையின் கூட்டத்தில் உரையாற்றும்போதே கோபி அனான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கூட்டம் கென்யத் தலைநகர் நைரோபியில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சூடானிய அரசுக்கும் தென்பகுதியில் இயங்கும் கிளர்ச்சிக்குழுவின் தலைவர்களுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்களை இவ்வருட முடிவில் முடிவுக்குக்கொண்டு வரவே இக்கூட்டம் நடைபெறுகிறது.

நேற்று இரு தரப்பினரும் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட இருந்தனர்.

மேற்படி உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் ஐக்கிய நாடுகள் சபை உட[illegible]க தார்பூர் பகுதியில் மறு சீரமைப்புப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது. (க-3)

# அரபாத்தின் மரணத்தில் சந்தேகம்?

ரமல்லா,நவ.20

பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தின் மரணம் தொடர்பாக சந்தேகம் எழுந்துள்ளதை அடுத்து, பலஸ்தீனத் தூதுக்குழு ஒன்று விரைவில் பிரான்ஸ"க்குச் செல்லவுள்ளது.

இதனை ரமல்லாவில் உள்ள அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரபாத்தின் மரணத்துக்கான காரணத்தை வெளியிட பிரான்ஸின் அந்தரங்கச் சட்டம் தடைவிதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் அரபாத்தின் மனைவி சுஹா அல்லது அவரின் குடும்பத்தினர் மாத்திரம் மருத்துவ விவரங்கள் அடங்கிய அறிக்கையைப் பெறலாம் என அச்சட்டம் தெரிவிக்கிறது. (ஐ-12)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

45 நாள்கள் நிரம்பிய அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: P.கமலநாதன், கலையரசு வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (38761)

14 சிறியை தொடர் இலக்கமாகக் கொண்ட கறுப்புநிற Mitsubishi Lancer கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு இல: 100, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (38768)

எம்மிடம் பாவித்த டிஷ் அன்ரனா (றிசீவர்) (K.T.V கார்ட்டுடன்) வீடியோ டெக்குகள், எலக ரோனிக் பொருள்கள் பலதும் விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ்.சுரேஷ்குமார், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் (காங்கேசன்துறை வீதியில்).T.P.021-4590413. (38768)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Original Prima Broiler (4 நாள்கள்), Prima பேட்டுக்குஞ்சுகள் ( 4 நாள், 2 மாதம்) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38742)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher, Dachshund நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக் குண்டு. க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு),19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38743)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை, கற்கோவளம் பாடசாலை ஒழுங்கையில் 2 பரப்புக் காணியில் சுற்றுமதிலுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: K.பாலன்.T.P. 021-226 3016. (சி-39160)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து வேண்டிய நிறையில் பெற்றுக் கொள்ளலாம். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம், சண்டிலிப்பாய்ச்சந்தி. T.P.:222 2867, 222 3529. (38775)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 32 வயதுள்ள, பூரம் நட்சத்திரம், 8 இல் செவ்வாய், லண்டனில் நிரந்தரத்தொழில் புரியும் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. குறிப்பு, புகைப் படம் முதலியவற்றுடன் தொடர்புகொள்ளவும். விள.இல:2439, C/o மே/பா உதயன். (38780)

## கைமாறிவிட்டது

யாழ்ப்பாணம், தட்டாதெருவைச் சேர்ந்த இந்துமதி சிவகுமாரன் என்பவருடைய லுமாலா பெண்கள் சைக்கிள் (இல.57159658) 17.11.2004 புதன்கிழமை கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோயிலில் சூரன்போரின்போது கை மாறிவிட்டது. தவறுதலாக மாறி எடுத்தவர்கள் மஞ்சவனப்பதி முருகன் கோயில் நிர்வாகசபையுடன் தொடர்புகொள்ளவும். (38778)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா புறொயிலர் குஞ்சுகள் இன்று (20.11.2004) மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ, ஆனைக் கோட்டைச் சந்தி, றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம், சண்டிலிப்பாய்ச்சந்தி (இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப் படும்).T.P.:222 2867. (38774)

## வாடகைக்கு

கொங்கிறீட் மிக்சர், பைவரேத் மிசின், கொலம்பொக்ஸ் ஆகிய வேறு பல பொருள் கள் எம்மிடம் வாடகைக்கு உண்டு. தொடர்பு: பூபதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை, யாழ்ப் பாணம்.T.P:021 4590970, 077 6257896.(38499)

## மோட்டார் சைக்கிள் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலருக்கும் மோட்டார் சைக்கிள் வழங்கப்படும். தொடர்பு: 360/5, பிரதான வீதி, (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P.:0776 544544, 0776 660177. (37943)

## சிரமதானம்

அரியாலை,நவ.20

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்.பலநோக குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் ஒன்று சேர்ந்து மேற்கொள்ளும் சிரமாதானப் பணிகள் இன்று சனிக்கிழமை நடைபெறும்.

சங்கத்தின் தலைவர் சூ.சிறில் தலைமையில் சங்கத்தின் வளாகப் பகுதி சிரமதானம் மூலம் துப்புரவுசெய்யப்படும். (ஐ-17)

## காணி உடன்தேவை

இலங்கையில் பிரபல்யமான தனியார் நிறுவனம் ஒன்றுக்கு யாழ். நகரின் மத்திய பகுதியில் 1½ பரப்பிற்கு மேற்பட்ட அளவில் காணி உடன்தேவை.

உள்ளவர்கள் உடன்தொடர்புகொள்ளவும்.

தொடர்புகொள்ள வேண்டிய எண்கள்:

021 222 5061 - *கிழமை நாள்களில் காலை 8.30 - மாலை 5 மணிவரை.*

0777 286249 (38745)

## விபத்தில் காயமடைந்தவர் மரணம்

நுணாவில் மேற்கில் கடந்த 11 ஆம் திகதி நடந்த வீதிவிபத்தில் சிக்கிய நபர் ஒரு வாரத்தின் பின்னர் மரணமானார்.

மிதிவண்டி - மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த சிவபாதசுந்தரம் என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றார். சிகிச்சை பயனளிக்காத நிலையில் அங்கு அவர் மரணமானார். (3-117)

## மருதங்கேணி வீதி புனரமைப்பு ஆரம்பம்

மருதங்கேணிச் சந்தியிலிருந்து வெற்றிலைக்கேணி வரை செல்லும் பிரதான வீதி புனரமைப்புச் செய்யப் படவுள்ளது.

கடந்த 20 வருடங்களிற்கு மேல் இவ்வீதி புனரமைப்புச் செய்யப் படாமல் வீதியின் இரு மருங்கிலும் பற்றைகள் வளர்ந்து காணப்படுகிறது.

புனரமைப்பின் முதற கட்டமாக பற்றைகளை வெட்டித் துப்புரவுசெய்யும் பணியில் அப்பகுதி மககள் ஈடுபட்டுள்ளனர். (3-36)

## பண்டத்தரிப்பில் பொலீஸார் வாகன சோதனை

வலி.தென்மேற்கு,நவ.20

கடந்த புதன்கிழமை பிற்பகல் பொலீஸார் பண்டத்தரிப்புச்சந்தியில் நாலாபுறமும் நின்று வீதியால்வரும் வாகனங்களை மறித்து அவற்றின் ஆவணங்களையும் சாரதி அனுமதிப்பத்திரத்தையும் சோதனையிட்டனர்.

சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருக்காதோர் பலர் இச் சோதனையின் போது அகப்பட்டுக்கொண்டனர். இராணுவத்தினரின் உதவியுடன் இப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை - பண்டத்தரிப்பு சந்தைப பகுதியில் மதுபோதையில் இரவுவேளையில் சிலர் கலாட்டா செய்து பொதுமக்களுக்கு தொந்தரவு கொடுப்பதாக இளவாலைப் பொலீஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து பொலீஸார் இப்பகுதியில் இரவுரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ-135)


## வன்னி வாடகைக் கார் உரிமையாளர் கழகம்

### உரிமையாளர் பார்வைக்கு

எமது கழகத்தில் உறுப்புரிமை பெற்று 31.12.2003ஆம் நாளுக்கு முன் வழி அனுமதிப்பத்திரம் பெற்று ஊர்திகளை பணியில் ஈடுபடுத்தாது எமது கழகத்தில் உறுப்புரிமையைப் பேணிவருவோர் வரும் 15.12.2004ஆம் நாளுக்கு முன் எமது கழகத்துடன் தொடர்புகொண்டு வழி அனுமதிப் பத்திரத்தினை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:

மேற்படி விவரம் தொடர்பாக,

03.12.2004 வெள்ளிக்கிழமை காலை 10.00 - 2.00 மணிவரை.

10.12.2004 வெள்ளிக்கிழமை காலை 10.00 - 2.00 மணிவரை.

கழகத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

தலைவர்,

வாடகைக்கார் உரிமையாளர் கழகம்,

வன்னி.

(38779)(42-34-15-17)

## WANTED

**Experienced English Teachers Kilinochchi.**

The English Language College in Kilinochchi seeks experienced English teachers to:

- Train local Teachers (in school curriculum, Grades 3-11)
- Teach advanced English.

**Requirements:**

- Minimum 5 years experience in teaching English to children and adults.
- Excellent spoken and written English

Please send details of qualifications and experience to:

The Principal.
**English Language College**
**Tamils Rehabilitation Organisation**
Jaffna Road, Kilinochchi.

**Applications close 29.11.2004**

The English Language College is an initiative of the Tamils Rehabilitation Organisation. (சி-39175)(34-15)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19.06.1922 மறைவு 15.12.2002



தோற்றம் 25.05.1927 மறைவு 10.12.2002

### திரு.திருமதி இராசரத்தினம் அன்னலக்சுமி

ஆண்டுகள் இரண்டு அகன்றோடி விட்டாலும்
ஈண்டுமது நினைவு எம் நெஞ்சை விட்டகலாது
என்றும் உமது நினைவுடனே பூவுலகில் நாம் வாழ்கிறோம்
இன்று உங்களை நினைந்து அஞ்சலி செலுத்துகின்றோம்.
ஓம் சாந்தி

19, நாவலடி லேன்,
கேசாவில் பிள்ளையார் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(38777)(42-18-15-34)

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

யாழ். நகரில் நவீன மயத்துடன் முற்றிலும் குளிரூட்டப்பட்ட

### றோயல் சிகை ஒப்பனை நிலையம்
### ROYAL HAIR DRESSING CENTER
### (Ladies & Gents)

என்னும் புதுக்கடையை எதிர்வரும் (22.11.2004) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு வரும் சுபவேளையில் ஆரம்பித்துவைக்க இறையருள் கைகூடியுள்ளது. இவ்வைபவத்திற்கு வாடிக்கையாளர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

றோயல் சலூன்,
87/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பிலிப் வைத்தியசாலைக்கு எதிரில்)

உரிமையாளர்,
சு.அன்ரன் யூதாகரன் (யூட்).
(38781)(34-15-17)

## கால எல்லை நீடித்தல் பற்றிய அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் - 2005ஆம் ஆண்டுக்கான சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் ஆகியவற்றுக்கான கேள்விப்பத்திரம் வழங்கும் கால எல்லை நீடித்தல்

மேற்குறிப்பிடப்பட்டவற்றுக்கான கேள்விப்படிவம் வழங்கும் கால எல்லை கீழ்க்குறிப் பிடப்பட்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

குத்தகை சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது அலுவலகத்தின் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி | : 2004.11.24 பி.ப.2.00 மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி | : 2004.11.25 ந.ப.12.00 மணிவரை |
| கேள்விப்படிவம் திறக்கப்படும் திகதி | : 2004.11.25 பி.ப.14.30 மணிக்கு |

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
2004.11.18. (C/39167)(42-34-18-15)

## இன்று! உங்கள் எதிர்காலத்தை நீங்களே நிர்ணயிக்கும் ஒருநாள்!

"உயர் கல்விக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு"

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமானதாக மாற்ற விரும்பும் பெற்றோர்களே நீங்களும் கலந்து கொள்ளுங்கள்

காலம் - இன்று (20.11.2004)
இடம் - MPCS கேட்போர் கூடம், K.K.S. வீதி.யாழ்ப்பாணம்.
நேரம் - காலை 10 மணி - 12 மணிவரை.




**Dr.M.G.R. Deemed University**

OFFSHORE CAMPUS INFORMATION AND ADMISSION CENTRE

No.195, Navalar Road, Jaffna,
T.P.: 021-222 2840

(C/39177) உதயன் Graphics

உதயன்

## மந்திரத்தில் மாங்காய்! நிதி அமைச்சர் சாதனை

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் முதலாவது - கன்னி - பட்ஜெட்டை நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம நேற்றுமுன்தினம் நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்தார். அதுமுதல் உள்நாட்டு, வெளிநாட்டுப் பொருளியலாளர்கள் பலரும் தங்கள் தலையைப் பிய்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றார்கள்..

வரவு - செலவுத் திட்டத்தின் உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ளமுடியாமல் அவர்கள் எல்லாம் திண்டாடிப் போயுள்ளனர்.

அவர்கள் மனதில் தீர்க்கப்படமுடியாமல் இருக்கும் ஒரே கேள்வி இதுதான். 'நிதி அமைச்சர் மந்திரத்தில் மாங்காய் பறிக்கப் போகின்றாரா?' என்பதுதான்.

'மக்களின் அரசு மக்களுக்காகத் தயாரித்த வரவு - செலவுத்திட்டம் இது - என்று அரசுத் தரப்பினர் பெரிதாகப் பீற்றிக்கொள்கின்றார்கள்.

முந்திய அரசுகள் எதுவும் அறிவிக்காத அதிரடி சம்பள உயர்வு அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருள்கள் மீதான 'வற்' வரி கணிசமாகக் குறைப்பு, அரச ஊழியர்களுக்கு இலகு வீட்டுக் கடன்திட்டம், இலவச காப்புறுதி வசதி என்று தாராள அறிவிப்புகள். ஆடம்பரப் பொருள்கள் சில மீதான வரி உயர்வைத் தவிர சாதாரண மக்களை நேரடியாகப் பாதிக்கும் புதிய சுமை எதுவும் வரவு - செலவுத் திட்டத்தில் இல்லை.

உள்ளூர் மூலவளங்களை, வருமானங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் என அரசுத் தரப்பு நேரத்துடனேயே அறிவித்திருந்தது.

அதனால், வெளிநாடுகளிலிருந்து அதிக வருவாயும், உதவியும், நன்கொடைகளும், கடன்களும் திரட்டும் ஏற்பாடுகள் பெரும்பாலும் இந்தப் பட்ஜெட்டில் இல்லை.

அதேவேளை, உள்ளூரிலும் உள்நாட்டிலும் அதிக வருமானங்களை ஈட்டுவதற்கான உத்திகள் குறித்தும் அதில் அதிகம் ஏதும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

அப்படியானால், அரச செலவீனங்களை - துண்டு விழும் தொகையை - எப்படிச் சமாளிக்கப் போகின்றார் நிதி அமைச்சர்? - இது புரியாமல்தான் தவிக்கின்றார்கள் பொருளாதார வல்லுநர்கள்.

கடந்த தடவை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டத்தில் இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி முறையில் சமாதானத் தீர்வு காண்பது பற்றிய விடயத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் முன்னெடுக்கப்படுவதற்கான அதீத நம்பிக்கையை அந்த வரவு - செலவுத் திட்ட உரை பிரதிபலித்தது. அவ்வாறு முன்னெடுக்கப்படுகையில், சர்வதேச சமூகம் வழங்குவதற்கு உறுதியளித்த 45 ஆயிரம் கோடி ரூபா நிதி உதவி நாட்டுக்கு வந்து குவியும் என்ற எதிர்பார்ப்பு அதில் ஒலித்தது.

ஆனால், அந்தக் கதையே இப்போதைய வரவு - செலவுத் திட்டத்தில் இல்லவே இல்லை.

சமாதான முயற்சிகளிலும், அது முன்னெடுக்கப்படுவதன் மூலம் நாட்டுக்குக் கிடைக்கக் கூடிய சர்வதேச சமூகத்தின் தாராள உதவியிலும் இந்த அரசுக்கு நம்பிக்கை இல்லை என்பதையும் -

சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் முன்னெடுக்கும் உறுதிப்பாடு இந்த அரசிடம் இல்லை என்பதையும் -

வெளிப்படுத்தி, எடுத்துக்காட்டி, உறுதிப்படுத்துவதற்கு இந்த வரவு - செலவுத் திட்ட உரை நல்ல சான்று.

யுத்தத்தால் பாதிப்புற்ற வடக்கு - கிழக்குப் பிரதேச மக்களுக்கும் நிவாரணமும், புனர்வாழ்வும் அளிப்பதற்கான விசேட ஏற்பாடுகளும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இல்லை. யுத்தத்தால் பாதிப்புற்ற தமிழர் தாயகத்தில் கட்டுமாணங்களை மீள அமைப்பதற்கு சுமார் 50 கோடி ரூபா என்ற வெறும் பேச்சு ஜால ஒதுக்கீடுதான் உள்ளது. இது 'ஆனைப்பசிக்குச் சோளப் பொரி' போன்ற தாளிப்புப் பிரகடனம்.

ஒட்டு மொத்தத்தில் சமாதான நம்பிக்கையையும் தராத - பொருளாதார உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தாத - வெற்று வேட்டு வரவு - செலவுத் திட்டமாகவே இது அமையும் என்ற எதிர்பார்ப்பையே ஏற்படுத்தியிருக்கின்றது.

வழக்கமாக வெளியில் இனிப்புப் பூசப்பட்ட உள்ளே கசப்பு மருந்தைக் கொண்ட - குளிசைப் பாணியிலே வரவு - செலவுத் திட்டங்கள் நமது நாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு வந்துள்ளன.

இந்த வரவு - செலவுத் திட்டத்திலும் வெளியில் இனிப்பு நன்கு பூசப்பட்டுள்ளது. ஆனால், உள்ளே கசப்பு மருந்து அல்ல - எதுவுமே இல்லை என்பதுதான் ஆச்சரியத்துக்குரியதாகும்.

வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் ஆடம்பரமாக வாரி வழங்க முன்வந்துள்ள அரசு, அதற்கான நிதித் தேட்டங்களை எங்கு பெறப்போகின்றது எனத் தெளிவுபடுத்தவில்லை என்பதே குற்றச்சாட்டு.

உரிய சேமிப்புக் கையிருப்பு இன்றி வெறும் பணத்தாள்களை அடித்து விட்டிருக்கும் இந்த அரசு, அந்தக் கைங்கரியத்தை நம்பித்தான் இதில் இறங்கியுள்ளதோ என்னவோ....!

# மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தினால் சமாதானச் சூழலைத் தொடர்ந்து பேணலாம்

### அரசமைப்பு விவகார அமைச்சின் அதிகாரி கூறுகிறார்



யாழ்ப்பாணம்,நவ.20

யுத்தத்தினால் நலிவடைந்துள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலமே சமாதானச் சூழலைப் பேணலாம். அந்த வகையிலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குகின்றோம்.

- இவ்வாறு தெரிவித்தார் அரசியலமைப்பு விவகார, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான செயற்திட்டப் பணிப்பாளர் பேராசிரியர் லக்ஷ்ரீ பெர்னாண்டோ.

மேற்படி அமைச்சினால் சமாதானக் கிராமங்களாகத் தெரிவு செய்யப்பட்ட சங்கானை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பல்ல சுட்டி மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த தோறாந்தோட்டம் ஆகியவற்றைச் சேர்ந்த பயனாளிகளுக்கு உணவு அல்லாத பண்டங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று சங்கானை பிரதேச செயலக அரங்கில் இடம்பெற்றது.

அங்கு கலந்துகொண்டு உரையாற்றும போதே லக்ஷ்ரீ பெர்னாண்டோ மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.சிவராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் உரை நிகழ்த்துகையில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் கடந்த 20 வருடங்களாக இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால மக்களின் பொருளாதாரம் சிதைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்கி அவர்களின் வாழ்கைத்தரத்தை மேம்படுத்துவதன் மூலமே சமாதானத்தை ஏற்படுத்தமுடியும். அதுமட்டுமல்லாது தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆகிய மூவின மக்களும் ஒற்றுமையாக ஒரே நாட்டு மக்களாகச் சேர்ந்து வாழ்வதன் மூலமே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தலாம்.

இங்குள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் தென்பகுதியிலுள்ள சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியிலும் காணப்பட்டாலும் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் இப்பகுதியைச் சேர்ந்தவர்களே. அந்தவகையில் அரசமைப்பு விவகார, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் மூலம் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான செயற்திட்டத்தின் கீழ் யாழ்.குடாநாட்டிலுள்ள கப்பூது, பல்லசுட்டி மற்றும் தோறாந்தோட்டம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 200 பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உணவு அல்லாத பண்டங்களை வழங்குகின்றோம்.

எமது இந்தச் செயற்திட்டத்திற்கு பெருமளவு நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படவில்லை. குறைந்த நிதி வசதியைக் கொண்டு தற்போது இச்சிறு உதவியை வழங்குகின்றோம். இத்துடன் எமது பணி நின்றுவிடாது சர்வதேச நாடுகள் மற்றும் உதவி செய்யும் சர்வதேச நிறுவனங்கள் என்பனவற்றிடம் உதவிகளைப பெற்று தொடர்ந்தும் இம்மக்களுக்கான சேவைகளைத் தொடர்ந்து செய்வோம்.

யுத்தம் ஒன்று மீண்டும் வந்தால் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியாது. எனவே, யுத்தம் ஏற்படாது சமாதானத்தை ஏற்படுத்த மூவின மக்களும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். நாம் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காக பாடுபட்டு வருகின்றோம். அதேபோல் நீங்களும் இணைந்து செயற்பட வேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான செயற்றிட்ட உதவிப் பணிப்பாளர் ராஜித பண்டித சேன, திட்ட இணைப்பாளர்களான எச்.எம்.ஜெயவீர, மாலினி பரமகுரு, ஜானகி குணதிலக மற்றும் நந்தசேன, உதவிப் பிரதேச செயலர் எம்.தேவந்தினி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(8-5)




சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான செயற்திட்டத்தின் கீழ் சமாதான கிராமங்களாகத் தெரிவு செய்யப்பட்ட பல்லசுட்டி, தோறாந்தோட்டம், ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கான உதவிப் பொருள்களை பேராசிரியர் லக்ஷ்ரீ பெர்னாண்டோ வழங்குவதனையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், பயனாளிகளையும் படங்களில் காணலாம். *(படங்கள்: வசந்தன்)*

### மாவீரர் வார நினைவாக நடத்தப்படும்

# விவாதச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,நவ.20

சர்வதேச தமிழீழ மாணவர்பேரவையினர் மாவீரர் தினத்தையொட்டி நடத்திய விவாதச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தியிலுள்ள பேரவையின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

சர்வதேச மாணவர் பேரவையின் தலைவர் இ.பகீரதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

முன்னதாகப் பொதுச்சுடரேற்றல், ஈகச் சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல், அக வணக்கம் ஆகியவற்றுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

முதல் நிகழ்வாக தமிழீழத் தேசியத் தலைவர் வேபிரபாகரனின் 50ஆவது பிறந்த நாள் நினைவாக குடாநாட்டில் இந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 5 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

தொடர்ந்து தேசியத் தலைவர் வேபிரபாகரனின் சிந்தனைகள் உள்ளடக்கப்பட்ட கைந்நூல் ஒன்றும், மாவீரர்களின் தியாகத்தைச் சித்திரிக்கும் கவிதை ஒலி நாடாவும் வெளியிடப்படும்.

விவாதச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்குத் தெரிவான யாழ். பல்கலைக் கழக விவாத அணியினருக்கும் கோப்பாய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விவாத அணியினருக்கும் இடையிலான 'தமிழ் மக்களின் இருப்புக்களின் அழிப்புக்களில் ஈடுபட்டவர்களில் விஞ்சி நிற்பது ஜே.ஆரா? சந்திரிகாவா? என்ற தலைப்பிலான விவாதப் போட்டி இடம்பெறும்.

இதில், முதல் மூன்று இடங்களைப் பெறும் விவாத அணியினருக்கு பெறுமதி மிக்க பரிசில்களும், போட்டியில் பங்கு பற்றிய விவாத அணிக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்று மாணவர் பேரவையின் பொறுப்பாளர் ந.கண்ணன் தெரிவித்துள்ளார்.

இறுதியில் கருத்துரைகளும், சிறப்புரைகளும் இடம்பெறும்.

(8-13)

# யாழ்.குடாநாட்டில் விரைவில் சூழல் முகாமைத்துவப் பணியகம்

### அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன

யாழ்ப்பாணம்,நவ.20

யாழ்.குடாநாட்டில் சூழல் முகாமைத்துவப் பணியகம் ஒன்றை அமைத்து சூழல் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள தேசிய நகர அபிவிருத்தித் திட்டப்பணியகம் திட்டமிட்டுள்ளது.

இதற்கென தேசிய நகர அபிவிருத்தித் திட்டப் பணியகத்தின் பணிப்பாளர் கலாநிதி பாமி இஸ்மாயில் யாழ்.குடாநாட்டில் உள்ள நகர அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாநகர அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றை நேற்று யாழ்.பொது நூலகத்தில் நடத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த அவர் -

குடாநாட்டில் சூழல் பாதிப்பு ஏற்பட்டு வருவதாகவும், இதனைப் பாதுகாக்க சுகாதார ஊழியர்கள் மட்டுமன்றி பொதுமக்களும் சுகாதாரத்தினைப் பேண முக்கிய பங்காற்ற வேண்டும் என்றும் - கேட்டுக் கொண்டார்.

இதேவேளை - இந்தச் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள முதல் முறையாக யாழ்.நகரில் சூழல் முகாமைத்துவப் பணியகம் ஒன்றை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இதற்கான உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன வழங்கப்படவுள்ளதாகவும் யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

(8-6)

### நாளை

கார்த்திகை 06
ஞாயிற்றுக்கிழமை
(21.11.2004)
திதி: தசமி
பின்னிரவு 12.33 வரை
நட்சத்திரம் : பூரட்டாதி
முன்னிரவு 08.31
சுபநேரம் : 09.10 - 10.40
ராகுகாலம் : 04.40 - 06-10
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கேட்பதையெல்லாம் நம்பாதீர்கள், தெரிந்ததையெல்லாம் சொல்லாதீர்கள்.

## 'கடலோர அருவோசை' வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம்,நவ.20

'கடலோர அருவோசை' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பொலிகண்டி கந்தவனம் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உடுத்துறை மகாவித்தியாலய ஆசிரியர் பா.கிருஷ்ணஜோதி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

ஆசியுரையினை, கந்தவனம் ஆலயப் பிரதமகுரு மகாகணபதி சிவானந்தராஜாக் குருக்களும், மதிப்பீட்டுரையை பேராசிரியர் அ.சண்முகதாஸும் நிகழ்த்துவர். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.(8-202-204)

மறைந்தும் மறவாத

## ஈராமாண்டு நினைவலைகள்

| மண்ணிலே மலர்ந்தது | | விண்ணிலே உதிர்ந்தது |
|---|---|---|
| 05 - 04 - 1926 |  | 13 - 12 - 2002 |

அமரர் தனுக்கோடி புண்ணியமூர்த்தி
(நெடுந்தீவைச் சேர்ந்த இளைப்பாறிய அரச மருந்துக் கலவையாளர்)

திதி: 20.11.2004

தோற்றம் மறைந்தாலும் துயரமோ மறையவில்லை
காலம் கரைந்தாலும் கவலைகள் ஆறவில்லை
ஈராண்டாய் நீங்கள் சென்ற இடமறியோமே!
எங்கிருந்தாலும் உங்கள் ஆத்மா சாந்தி பெறுக!

- குடும்பத்தினர்.

19/1, சாஸ்திரியார் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். T.P.: 222 6232. (38766)(34-18-46-24)

## வட பிராந்திய போக்குவரத்துச்சபை - கோண்டாவில்
## வழங்குநர்களையும் சேவைகளையும் பதிவு செய்தல் - 2005

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு வ.பி.போ.சபையுடன் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநரிடமிருந்து விண்ணப்பங்கள் 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

வழங்கல்கள்:

1. பேருந்துகளுக்கான உதிரிப்பாகங்கள், வழங்கப்பட வேண்டிய பேருந்துகளின் இனம் பின்வருமாறு:
   (அ) லேலண்ட், லங்கா அசோக் லேலண்ட்
   (ஆ) டாட்டா - 1210 எஸ்ஈ, 1313 (டிமோ)
   (இ) கிறேட் வோல் (சீனத்தயாரிப்பு)
2. வில்லுத் தகடுகள்
3. ரயர், ரியூப் வகைகள்
4. பற்றரி, அசிட் வகைகள்
5. மின் உபகரணங்கள், மின் சாதனங்கள்
6. பிளாஸ்டிக் கண்ணாடி, பாதுகாப்புக் கண்ணாடி வகைகள்
7. சகல வகையான இரும்புப் பொருள்கள், ஆணி வகைகள், சோல்டறிங் ஈயம், இனமால் பெயின்ட் வகைகள், அலுமினியம் சீற், கல்வனையிஸ்ட் சீற்.
8. அலுவலக மரத்தளபாடங்கள்
9. அலுவலக உபகரணங்கள், ஸ்டில் அலுமாரி, ஸ்டில் கபினெற்கள்
10. காகிதாதிகள்
11. கணனி இயந்திரங்களுக்கான உபகரணங்கள்.

சேவைகள்:

1. அச்சிடுதல் - ரிக்கற் புத்தகங்கள், பொதிச்சீட்டுக்கள், வழிப்பட்டியல்கள் ஆகிய பலதரப்பட்டவை.
2. அலுவலக தட்டச்சு திருத்துதல், பக்ஸ் இயந்திரம் திருத்துதல், போட்டோ பிரதி செய்யும் இயந்திரம் திருத்துதல்.
3. கடைச்சல் வேலை செய்தல்.
4. டீசல் இன்ஜெக்ரர் பம்புகள் திருத்துதல் மற்றும் இவற்றிற்கான இன்ஜெக்ரர்கள், நொசில், பம்ப் இன்ஜெக்ரர் எலிமென்ற், வால்பு ஆகிய உபகரணங்கள்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் *"வழங்கல்கள், சேவைகள் - 2005"* எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் *"தலைவர், கூறுவிலைச் சபை, வ.பி.போ.சபை, பலாலி வீதி, கோண்டாவில்"* என முகவரி இடப்படல் வேண்டும்.
2. ஒவ்வொரு வழங்கல்கள் சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக ரூபா 100/- காசாக/காசுக் கட்டளையாக/தபால் கட்டளையாக பிராந்தியக் கணக்காளரின் பெயரில் பெறப்பட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

கோரப்படும்போது விலைமனுக்களை சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள்கள்/சேவைகள் வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன் அறிவித்தலின்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் வழங்கல்/சேவை
2. பெயரும் விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்
4. வியாபாரப் பதிவின் இலக்கமும் திகதியும்
5. வியாபாரத்தின் தன்மை
6. வங்கியாளர்களின் பெயர்
7. எமக்குக் கிடைக்கக்கூடிய கடன் வசதிகள்/காலஎல்லை

*குறிப்பு:* சேவைகள் வழங்கலுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்களை வடபிராந்திய போக்குவரத்துச்சபை தலைமைக் காரியாலயத்தில் விநியோக அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

க.கணேசபிள்ளை,
பொதுமுகாமையாளர்,
(சி-39106) (26-16-45) வ.பி.போ.சபை. கோண்டாவில்.

## கூட்டுறவுச் சங்கத்திற்கு சேவைக்கட்டணம் கிடைத்தது

வலி.தென்மேற்கு,நவ.20

சங்கானைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் வழங்கியமைக்காகச் செலுத்தவேண்டிய சேவைக் கட்டணக் கொடுப்பனவான 26 லட்சம் ரூபாவை யாழ். அரச செயலகப் புனர்வாழ்வுப் பிரிவு அண்மையில் வழங்கியுள்ளது.

சங்கம் பலத்த நஷ்டத்தில் இயங்கிவருவதால் நிலுவையாக உள்ள இந்தக் கொடுப்பனவை வழங்குமாறு சங்க நிர்வாகம் யாழ். மாவட்ட அரச அதிபரைக் கடித மூலம் கேட்டிருந்தது. தற்போது இந்த 26 லட்சம் ரூபா கொடுப்பனவு சங்கத்திற்குக் கிடைத்துள்ளதாகச் சங்கத் தலைவர் ம.சிவசுப்பிரமணியம் தெரிவித்தார். (ஐ-135)

## தனியார் வருமான வரி தொகைக்கு ஏற்ப அதிகரிப்பு

கொழும்பு,நவ.20

புதிய பட்ஜெட்டில் தனியார் வருமான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வருடாந்தம் மூன்று லட்சம் ரூபா வரையிலான தனியார் வருமானத்திற்கு வரி விதிப்பு இல்லை.

அதற்கு மேற்பட்ட, அடுத்த மூன்று லட்சம் ரூபாவுக்கு ஐந்து வீத வரியும் -

அதற்கு அப்பால் இரண்டு லட்சம் ரூபாவுக்குப் பத்து வீத வரியும் -

அதற்கு மேலும் சம்பாதிக்கும் அடுத்த இரண்டு லட்சம் ரூபாவிற்குப் பதினைந்து வீத வரியும் -

அதற்கு அடுத்த இரண்டு லட்சம் ரூபாவுக்கு இருபது வீத வரியும் -

அதை அடுத்துவரும் இரண்டு லட்சம் ரூபாவுக்கு இருபத்தைந்து வீத வரியும் -

அதற்கு மேலும் உழைக்கும் தொகைக்கு முப்பது வீத வரியும் விதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. (ஐ-க)

## தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கான பயிற்சி நெறி

தென்மராட்சி,நவ.20

'நீர்ப்' திட்ட நிறுவன அனுசரணையுடன் யாழ். மாவட்ட அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர்களது தொழில் திறனை மேம்படுத்துவதற்கான 3 நாள் பயிற்சிநெறி இன்று சனிக்கிழமை தொடக்கம் 3 தினங்களுக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் கலந்துகொள்வதற்குச் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு யாழ். செயலகத்தினால் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (8-117-202)

## வெள்ளி விழா மலர் வெளியீடும் பரிசில் தினமும்

யாழ்ப்பாணம்,நவ.20

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் வெள்ளிவிழா மலர் வெளியீடும், பரிசில் தினமும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி த.துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராகத் தேசிய கல்வி நிறுவகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் குமாரசாமி சோமசுந்தரமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாகலிங்கம் வரதராஜா, யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை உப பொருளாளர் திருமதி விமலா மணிவாசகர் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (8-202)

## சத்துணவு வழங்கல்

வலி.தென்மேற்கு,நவ.20

வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்திலுள்ள தாய் - சேய் சிகிச்சை நிலையத்தில் இன்று சனிக்கிழமை முற்பகலில் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் 'கோன்சோயா' சத்துமா இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இப்பிரிவிலுள்ள பெற்றோர் தமது பிள்ளைகளைக் கொண்டு வந்து இந்த மாவைப் பெற்றுச் செல்லுமாறு குடும்ப நல சுகாதார அலுவலர் செல்வி டானியேல் ஞானரத்தினம் கேட்டுள்ளார். (8-135-202)

## மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு

நல்லூர்,நவ.20

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கான மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவுகளை எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமைக்குள் பெற்றுக்கொள்ளுமாறு ஆனைப்பந்தி உப தபாலதிபர் கேட்டுள்ளார். (8-111)

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

### அமரர் இராசையா ஐயர் நடனசபாபதிசர்மா

31.10.2004 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் இராசையா ஐயர் நடனசபாபதி சர்மா அவர்களின் 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (21.11.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந் நிகழ்விலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வற்றாக்கை அம்மன் கோயிலடி,
கந்தரோடை.

குடும்பத்தினர் சார்பில்
(38738) (38-18-46-24) ந.உ.மாகதசர்மா (மகன்)

German Technical Cooparation

## கேள்வி அறிவித்தல்

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் அனுசரணையுடனான ஜீ ரீ சற் (GTZ). புதிய உணவு உதவித்திட்டம் பின்வரும் உணவுப் பொருள்களை வழங்குவதற்கு அனுபவமுள்ள பிரபல வர்த்தக நிறுவனங்களை அழைக்கின்றது.

| | |
|---|---|
| அ. புழுங்கல் சிவப்புநாட்டு அரிசி /- தீட்டல் பச்சை அரிசி | 100 மெற்றிக்தொன் |
| ஆ. கோதுமை மா | - 100 மெற்றிக்தொன் |
| இ. பருப்பு | - 25 மெற்றிக்தொன் |
| ஈ. சீனி (வெள்ளை) | - 92 மெற்றிக்தொன் |
| உ. கௌப்பி | - 50 மெற்றிக்தொன் |
| ஊ. பயறு | - 25 மெற்றிக்தொன் |

இப்பொருள்கள் மொத்தமாக 2004 டிசெம்பர் 15ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் யாழ்ப்பாணத்திற்கு வழங்கப்படல் வேண்டும்.

விவரமான விதிகள், நிபந்தனைகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் 2004 நவம்பர் 22, 23ஆம் திகதிகளில் முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை இல.. 6, ஜாவத்தை வீதி, கொழும்பு - 5 இல் உள்ள ஜீ ரீ சற் (GTZ) அலுவலகத்தின் கொள்வனவுப் பிரிவில் அல்லது இல. 472, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள GTZ - NRP அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூபா 3,000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களைப் பெறுவதற்கு, தலைமை நிர்வாகி, GTZ இல. 6, ஜாவத்தை வீதி, கொழும்பு - 5 என விலாசமிடப்பட்ட ஒரு கடிதத்தின் மூலப் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

2004 நவம்பர் 29ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு முன்பாக கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(சி-39168) (24)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



எமது அனைவரதும் உள்ளங்களையும்
உருகவைத்து உலகு துறந்த உத்தமர்
அமரர் சுப்பிரமணியம் இராசரத்தினம் (சிங்கத்தார்)
(தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

மண் மகிழ 18-06-1951 | கண் நெகிழ 21-10-2004

21.10.2004 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் சபிண்டீகரணக் கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (20.11.2004 ) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் மைத்துனர் திரு. செல்லையா நேசநாதன் அவர்களின் இல்லத்தில் நடைபெறவுள்ளன.
இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் , ஊழியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற மதியபோசனத்திலும் பங்கேற்குமாறும் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம். (சி-39165)(34-19-44-24) - குடும்பத்தினர்.


# பனங்கடகம் இழைக்கும் தொழிலைப் பாதுகாக்க சந்தைவாய்ப்பு வேண்டும்

குடாநாட்டில் பனைவளம் மிகுந்து காணப் படும் பிரதேசங்கள் பல உள்ளன.

அந்த வளத்தை பேணிக்காப்பதில் இருக் கும் ஆர்வம் அவைசார்ந்த உற்பத்தி பொருள் களுக்கு போதிய வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தி கொடுபபதில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது.

இந்த வளத்தைப் "புதையல் காத்த பூதம் போல்" பேணிக்காப்பது மட்டுமன்றி அவைசார்ந்த உற்பத்திப் பொருள்களில் ஈடுபடுபவர்களுக்கு சந்தை வாய்ப்புகள், வழிகாட்டுதல்கள் ஏற்படுத் திகொடுப்பது இன்றைய காலகட்டத்தில் அவ சியமும் அவசரமுமாகும்.

பலவேறு பதிலீட்டு பொருள்கள் வந்துவிட்ட போதிலும் குடாநாட்டில் பனம்சார் உற்பத்திப்



பொருள்கள் வரிசையில் தலைமுறை தலை முறை ரீதியாக கடகத்திற்கு நல்லகிராக்கி உள் ளது. குறிப்பாக கட்டடப் புனரமைப்பு வீதிப்புனர மைப்புப் பணிகளில் கடகம் அதிகளவில் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

இன்றைய நாகரிக உலகில் ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்டோரே கடகம் இழைத்தலில் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின் றன. அடுத்த தலைமுறையுடன் கடகத்தை காண் பது அரிதாகிவிடும் என்ற கவலை பலரிடம் மேலோங்கியுள்ளது.

குடாநாட்டு சந்தைகளில் அதிகளவு ஆக்கிர மித்து இருப்பது எழுவைதீவில் இழைக்கப்படும் நார்க்கடகங்கள் ஆகும் அண்மையில் இத்தீவிற்கு சென்றபோது கடகம் இழைத்தல் தொடர்பான தகவல்களை அறியக்கூடியதாக இருந்தது. இங்கு பல குடும்பங்கள் முழுநேரத் தொழிலாக கட

## பாரம்பரியமாக அத்தொழிலை மேற்கொள்பவர்களின் விருப்பம் இது

கம் இழைத்தலில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் இருந்து பெறப்படும் சொற்ப வருமானத்தின் மூலமே அவர்களது குடும்பப் பொருளாதாரத் தேவைகள் அனைத்தும் நிறைவு செய்யப்படு கினறன.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் வாழ்க்கைச் செலவு அதிகரித்து விட்ட இந்நிலை யில் ஒருசில வியாபாரிகளே தம்மிடம் இருந்து கடகங்களை மிகக்குறைந்த விலையில் கொள வனவு செய்துவருவதாக அவர்கள் தெரிவித் தனர்.

'தவிச்ச முயல் அடிப்பது போல்' அவர்கள் தமது கடகங்களை குறைந்தவிலையில் கொள வனவு செய்து யாழ்ப்பாணத்தில் கூடியவிலைக்கு விற்று கொழுத்தலாபம் சம்பாதித்து வருகின்றனா என அவர்கள் தமது கவலையை வெளிப்படுத் தினர். அவர்களது கவலையில் நியாயம் இருக்கத தான் செய்கிறது.

இப்பிரதேசத்தில் வசிப்பவரும் கடகம் இழைத் தலில் அனுபவம் வாய்ந்தவருமான எஸ்.தனி நாயகம (வயது 57) என் பவர் தன் அனுபவத்தை எம்முடன் பகிர்ந்து கொள் கிறார்.

நீண்டகாலமாக கடகம் இழைத்தலில் ஈடுபட்டு வந்தபோதும் தற்பொழுது கண்ணில் ஏற்பட்ட சத்திரசிகிச்சையை அடுத்து கடகம் இழைத் தலை நிறுத்திவிட்டேன் எனத் தெரிவித்த அவர், ஆளியைப் போட்டதும் நடைபெறும் வேலை யல்ல இது. இத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு அதிகளவு பொறுமை அவசியம். ஓலைவார் தலில் இருந்து பிளாசு கட்டுதல் வரை ஒருபடி முறை ஒழுங்கில் வேலைகள் நடைபெற்று வரு கின்றன.

கடகங்களில் பனை ஓலைக்கடகம், நார்க் கடகம் என இருவகைகள் உள்ளபோதும் பனை ஓலையை மட்டும் பயன்படுத்தி இழைக் கப்படும் கடகங்களை எவரும் விரும்புவதில்லை. காரணம் கற்கள் போன்ற கடின பொருள்களை அள்ளுவதற்கு பயன்படுத்தும்போது உடனே கிழிந்துவிடும். இதனால், பனை ஓலையை கொண்டு முதலில் கடகத்தை இழைத்த பின்னர் அதன்மேல் நார்கொண்டு மீண்டும் இழைக்கின் றோம். இதனையே நார்க்கடகங்கள் என்கின் றனர். இவைநீடித்த பயன்பாட்டை கொண்டவை. பலரது தெரிவும் இவ்வகை நார்க்கடகங்களை

**செவ்வி:கே.ஶ்ரீஸ்கந்தராசா**

நோக்கியே அமைகிறது.

அளவுரீதியாக நோக்குகின்றபோது, சிறிய வகை கடகங்களாயின் 12 இதழ்கொண்டு அமைக் கப்படும் கடகங்களை உள்கடகங்கள் எனவும் 13 இதழ் கொண்டு அமைக்கப்படும் கடகங் களை புறக்கடகங்கள் எனவும் அழைக்கின்றனர். அதேபோன்று 17இதழ், 18 இதழ் கொண்டு அமைககப்படும் கடகங்கள் பெரிய கடகங்களாக கொள்ளப்படுகின்றன - என்றார் அவர்.

**தொழில் வளம் தொகுப்பு: குகா**

இத்தொழிலில் ஈடு படுபவர்கள் மத்தியில் கறுவுதல், அடவியன், வளையம், பிளாச்சு சீவு தல், வாட்டுதல், வள்ளி சுத்துதல் போன்ற சொற்பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை தொடர்பான மேலதிக தகவல்களின் பொருட் டும் அவற்றை நேரடியாக அவதானித்து அறிந்து கொள்ளும் பொருட்டும், அச்சமயம் கடகம் இழைத்துக் கொண்டிருந்த வே.நகுலேஸ்வரன் (வயது 33) என்பவருடன் என்னை அறிமுகம் செயதுவைக்கிறார். அவர் எம்மோடு தமது அனு பவத்தை பகிர்ந்துகொள்கையில் 12 வயதில் இருந்து தான் கடகம் இழைத்தலில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்தார். அவரது வீட்டுத் திண ணையில் கடகம் இழைப்பதற்கு பயன்படுத்தப் பட்டு வரும் பனைஓலை, நார்கள் ஆகியன அழகாக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அவற் றைப் பயன்படுத்தி அவர் வேகமாக கடகம் இழைத ததை பார்த்தபோது அவரது நீண்ட அனுபவம்



பளிச்சென்று தெரிந்தது. அவருக்கு உதவியாக அவரது மனைவி மற்றும் தாயார். பனம் மட்டை யில் இருந்து நார்களை பிரித்தெடுத்தல் முதல் கடகம் இழைத்தல் வரை ஒருவருக்கொருவர் ஒத்தாசையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

கடகம் இழைப்பதற்கு பனம் மட்டையும் பனை ஓலையுமே பிரதான உள்ளீடுகளாகும். இவற்றைப் பெறுவதற்கு நாங்கள் ஒரு பனை மரத்திற்கு 15 ரூபா அதன் உரிமையாளருக்கு செலுத்தவேண்டும் அத்துடன் வெட்டுக்கூலியாக பனை ஒன்றிற்கு 25 ரூபா செலுத்துகிறோம். இதன்மூலம் ஒரு பனை மரத்தில் இருந்து சரா சரி 20 மட்டைகள் பெறப்படுகின்றன. அல்லது ஒரு பனம் மட்டையை 2 ரூபாவிற்கு கொள்வனவு செய்கிறோம். "உள்ஓலைகளே கடகம் இழைப் பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனை பதமாக வெயிலில் உலரவிட்டு வரிடை செய்து வைத்துக்கொள்வோம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை வங்கியின் மாதிரி பாடசாலைப் பிரிவு ஆரம்பம்

இலங்கை வங்கியின் பாடசாலைகள் பிரிவுக் கிளைகள் அண்மையில் யாழ்.மத்திய கல் லூரி, வேம்படிமகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம் ஆகிய பாடசாலைகளில் இலங்கை வங்கியின் வடபிராந்தியச் செயற் பாட்டு முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம், யாழ். இலங்கை வங்கியின் பிரதான முகாமையாளர் எஸ்விக்னராசா ஆகியோரின் தலைமையில் ஆரம பித்து வைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்கு விப்பதற்கும் அவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதற்கும் இது உருவாக்கப்பட்டுள்ளது.

முழுவதும் மாணவர்களே இவ்வங்கியின் உத்தியோகத்தர்களாக கடமை புரிவார்கள். இம மாதிரி வங்கியில் கூடுதல் வைப்புச் செய்த மாண வருக்கும், கூடிய வைப்புச்செய்த மாதிரி வங்கி யின் பாடசாலைப் பிரிவிற்கும் விசேட பரிசுகள் இலங்கை வங்கியினால் வழங்கப்பட இருக்கின றன. இதன் யாழ்ப்பாண நகர இணைப்பு வங்கி அதிகாரியாக வி.ஆர்.சுதாகரன் செயற்படுகின்றார்.

# சமுர்த்திக் கடனுக்கான வட்டி குறைக்கப்பட்டது

சமுர்த்தி வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வந்த கடன்களுக்கான வட்டிகள் ஆறு வீதத் தினால் குறைக்கப்பட்டுள்ளன.


சமுர்த்தி வங்கிகள் மூலம் 24வீத வட்டி யுடன் வழங்கப்பட்டுவந்த, சுயதொழில்கடன், பயிர்ச்செய்கைக் கடன், மீன்பிடிக்கடன், இடர் கடன் ஆகியவற்றிற்கு 18 வீதமான வட்டி அற விடப்பட்டுள்ளது.

இவ்வட்டிக் குறைப்பு கடந்த மாதம் முத லாம் திகதிக்குப் பின்னர் கடன்பெறும் பயனாளி களுக்கே பொருத்தமானது எனவும்-

அத்திகதிக்கு முன்னர் கடன்பெற்றவர் களுக்கு முன்னைய நடைமுறையே பொருத்த மானது எனவும்- தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் சகல சமுர்த்தி வங்கிகளுக்கும் சமுர்த்தி வங்கி நிதி நடவடிக் கைப் பிரிவினால் அனுப்பிவைக்கப்பட்டுள் ளது.

(3-203-161)




ஆங்கில மருந்துகளை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் சிப்லா (Cipla) பிறைவேற் லிமி டெற் எனும் நிறுவனம் அண்மையில் ஆஸ்மா நோயாளர்களுக்கான இலவச மருத்துவ முகா மொன்றை மல்லாகம் அர்ச்சனா நர்ஸிங் ஹோமில், மல்லாகம் தெல்லிப்பளை லயன்ஸ் கழகத் துடன் இணைந்து நடத்தியது. அப்போது ஆஸ்மா நோயாளிகளுக்கான றொலர்பம் இலவசமாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சிப்லா நிறுவன பிரதிநிதி குணாளன் உரையாற்றுவதையும் லயன்ஸ் கழகப் பிரதிநிதிகள், நோயாளர்கள் உடனிருப்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: தெல்லிப்பளைச் செய்தியாளர்).*

# கைத்தொழில் ஆலோசனை வழங்க பிலிப்பைன்ஸ் நிபுணர் யாழ்.வருகிறார்

யாழ்.மாவட்டத்தில் சிறிய மற்றும் நடுத் தரக் கைத்தொழிலை விருத்தி செய்வதற்கான ஆலோசனை வழங்க பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த தொழில் நிபுணர் யோசி பிற்ரோ குல லீர்கோ யாழ்ப்பாணம் வருகின்றார்.

வட பிராந்திய வர்த்தக அபிவிருத்தி மையத தின் ஏற்பாட்டில் வரும் இவர் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 3-மணிமுதல 5 மணி வரை யாழ்வர்த்தகர்களை வணிகர் கழகப் பணி மனையில் சந்திக்கின்றார்.

இக்கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு வணிகர்களுக்குச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.



மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 'வெளிநாட்டு பண அதிர்ஷ்ட சீட்டிழுப்பு' தொடர்பான சீட்டு அறிமுக நிகழ்வின்போது கிளை முகாமையாளர் க.பாலச்சந்திரன் வாடிக்கையாளர் ஒருவருக்கு சீட்டினை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகே உதவிப் பிராந்திய முகாமையாளர் க.ஆனந்தராசா மற்றும் சில ஊழியர்களும் காணப்படு கின்றார்கள்.

# யாழ்ப்பாணத்தில் செயற்பட்டுவரும் ஹோட்டல் பாடசாலைக்கு மூடுவிழா

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட் டல் முகாமைத்துவ நிறுவனத்தால் யாழ்ப் பாணத்தில் நடத்தப்பட்டுவரும் ஹோட்டல் முகாமைத்துவப் பயிற்சிப் பாடசாலைகளை இந்த ஆண்டுடன் மூடுவதற்கு முடிவு செய்யப் பட்டுள்ளது.

திருகோணமலை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி ஆகிய நான்கு பிரதேசங்களில் உள்ள ஹோட்டல் முகாமைத்துவப் பயிற்சிப் பாடசாலைகளும் மூடப்படவுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஹோட்டல் முகா மைத்துவப் பயிற்சிப் பாடசாலை 2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ்.ஸ்ரான்லி வீதியில் சிறாம்பியடிப் பகுதியில் மணியம்ஸ் கட்டடத் தில் ஆரம்பிக்கப்பட்டது.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட புதிதில் மாண வர்கள் ஆர்வமாக வகுப்புக்களில் கலந்து பயிற்சி களைப் பெற்று வெளியேறியுள்ளனர்.

ஆனால் மாணவர்களிடம் உள்ள ஆங்கில அறிவு போதாமையாலும்- ஹோட்டல் முகாமைத் துவ கற்கை நெறியில் ஆர்வம் இல்லாமையா லும் - தொடர்ந்து மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டுள்ளது.

இதன் காரணமாகவே மேற்படி பாடசாலைகளை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டதாக யாழ். ஹோட்டல் முகாமைத்துவப் பாடசாலை அதி பர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை திருகோணமலையில் உள்ள ஹோட்டல் முகாமைத்துவப் பயிற்சிப் பாடசாலை மூடப்படுவதற்குப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஹோட்டல் முகா மைத்துவப் பாடசாலைக்கு ஒரு மாதத்திற்கு ஒரு லட்சத்திற்கும் அதிகமாகச் செலவு செய்ய வேண்டியுள்ளதாகவும்-

மாதாந்தம் மிகச்சொற்ப தொகையே வரு வாயாக உள்ளமையால் பெரும் நட்டம் ஏற்படுவ தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(3-12)

# யா/யாழ்.இந்து மகளி
## வெள்ளிவிழாச் சிறப்பும

### எனது பார்வையில் எங்கள் பாடசாலை (1979.01.01 -1996.07.09)
## முதல் அதிபரின் செய்தி



இந்த விழா சிறப்பாக நடைபெறவும் 'மலர்' அழகாக உருப்பெற்று வெளிவரவும் எனது நல்வாழ்த்துக்களை முதற்கண்தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்து மகளிர் சமூகத்திற்கு ஓர் ஆரம்பப் பெண்கள் பாடசாலை இல்லை என்ற பெருங்குறைக்கு நிவர்த்தி கண்டாற்போல, இந்தப் பாடசாலை 1979 ஆம் ஆண்டு தோற்றம் பெற்றது. அதற்கு முன் யா/யாழ். இந்து மகளிர் கல்லூரியுடன் இணைந்து ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்கிவந்தது.

தனியாக்கப்பட்டபோது பௌதிக வளங்கள் மிகவும் குறைவாகவே இருந்தன. மாணவர் தொகை குறைவாக இருந்தது. ஒரு சில ஆசிரியர்கள் மட்டும் கடமை புரிந்தனர். பின்னர் படிப்படியான முன்னேற்றம் ஏற்பட்டது. எத்தனையோ இன்னல்கள், தடைகளின் மத்தியில் கட்டட வசதிகள், தளபாடவசதிகள் தோன்றின. மாணவர்தொகை துரித கதியில் அதிகரித்தது. அதற்கேற்ப பௌதிக வளங்கள் இன்மை யால் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. அந்தக் காலத்தில் பயின்ற மாணவர்களினதும், பெற்றோர்களினதும் ,ஆசிரியர் களினதும் சகிப்புத்தன்மையுடன் கூடிய ஒத்துழைப்பினால் நிலைமையை ஓரளவுக்குச் சமாளித்துத்தான் பாடசாலையை நடத்த வேண்டியிருந்தது என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். அவ்வப்போது கடமையாற்றிய கல்வி அதிகாரிகளும் இந்தப் பாடசாலை யின் வளர்ச்சியில் தனிப்பட்ட அக்கறை எடுத்துள்ளனர்.

பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகள், பரீட்சைகள், விழாக்கள் யாவற்றிலும் இந்தப் பாடசாலைக்குச் சிறந்த பெறுபேறுகள் கிடைத்தன. நல்லொழுக்கம், கட்டுப்பாடு கொண்ட நன்மாணாக்கர்களை இப்பாடசாலை உருவாக்கிச் சமூகத்திற்கு வழங்கியுள்ளது.

ஆரம்பக் கல்வி முடித்து உயர்கல்லூரிகளுக்குப் போகும் மாணவிகள் அங்கு நற்பெயரும் நன்மதிப்பும் பெற்று முன்னிலை வகிக்கின்றனர். இப்பாடசாலையில் கற்ற மாணவிகளில் ஏராளமானோர் உயர்கல்வி கற்று உயர்பதவிகளில் உள்ளனர். உலகின் பல நாடுகளிலும் இவர்கள் நன்னிலைகளில் மிளிர்வது பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

இந்நாள் அதிபர் இப்பாடசாலையின் நற்பெயர் மங்காவண்ணம் பாதுகாக்கவேண்டிய கடப்பாடுணர்ந்து அதற்காக முழுமூச்சுடன் உழைத்து வருகின்றார். அவருக்கு உறுதுணையாய் ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். இதே போல இனிவரும் காலங்களிலும் இப்பாடசாலையின் பொறுப்பை யார் ஏற்கின்றனரோ அவர்களும் இதனை வளர்த்துக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

"பாடசாலை வாழ்க நற்பணி வளர்க"

திருமதி யோ. விக்கினேஸ்வரா, முன்னாள் அதிபர்.

## அதிபரின் உள்ளத்திலிருந்து....



1979.01.01 இல் திருமதி யோகம்மா விக்கினேஸ்வரா அவர்களை முதல் அதிபராகக் கொண்டும் 5 ஆசிரியர்களுடனும், 153 மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை, அன்று தொடக்கம் இன்றுவரை மாணவருக்கு உறுதிமிக்க அத்திவாரம் இடப்பட்டு, ஆளுமைமிக்க மாணவர் பரம்பரையும் நற்பிரஜைகளும் உருவாக வழி அமைத்துள்ளது. குறைந்த வளங்களுடன், தனது சேவையை நிறைவாக இப்பாடசாலைக்கு வழங்கி அயராது உழைத்த, இப்பாடசாலையின் முதல் அதிபர் அவர்களையும், இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த முன்னாள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், கல்வித்திணைக்களத்தினர் அனைவரையும் இந்நன்னாளில் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

கற்றல் , கற்பித்தல் செயற்பாடுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளால் சாதனைகள் படைத்துவரும் இப்பாடசாலை, புதுப்பொலிவுடன் இன்று வெள்ளிவிழாக் காண்கிறது. இந்நிகழ்வு எனது சேவைக்காலத்தில் இடம்பெறுவது நான்செய்த பாக்கியம் என்றே கருதுகின்றேன். சைவமும் தமிழும் தனது இரு கண்களாகக் கொண்டு அன்பே வாழ்வு எனும் மகுட வாசகத்திற்கு அமைவாக இயங்கும் இப்பாடசாலையின் நல்ல செயற்பாடுகளுக்கு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வதியும் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் பாடசாலை அதிபருடன் தோளோடு தோள்நின்று உழைத்து பாடசாலையின் பாரம்பரியத்தைப் பாதுகாக்க, இப்பாடசாலையை உருவாக்கியவர்களின் இலச்சியக் கனவுகளை நனவாக்க, உறுதிபூண்டு செயலாற்ற வேண்டுமென்று இந்த நல்நாளிலே கேட்டு நிற்கின்றேன். வெள்ளிவிழா நிகழ்வு சிறப்புற பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எனது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி தனரஞ்சனி துரைசிங்கம் அதிபர்.

## வாழ்த்துச் செய்தி

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை இன்று வெள்ளிவிழாவினைக் கோலாகலமாகக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். மேலும் சைவப்பாரம்பரியங்களையும், தமிழ் பண்பாட்டு கலாசார விழுமியங்களையும் கல்வி ஞானத் தையும் பெற்றுப் பேணி வருவதுடன், இப்பாடசாலை எதிர்கால சந்ததியினர்களை சமூகத்தில் நற்பிரஜையாகப் பிரகாசிக்கும் வண் ணம் உருவாக்கிக்கொண்டு வருகிறது என்றால் மிகையாகாது. ஆரம்ப காலந் தொடக்கம் இன்றுவரை பாடசாலையின் தனித்துவத்தையும் பெருமையையும் பேணிப் பாதுகாத்து வருவதில் முன்னின்று உழைத்த அதிபர்களையும், ஆசிரியர்களையும், பெற்றோர்களையும், பழைய மாணவர்களையும், நலன் விரும்பிகளையும் நான் மன நிறைவோடு பாராட்டுகின்றேன். இப்பாடசாலை இன்னும் பல நூற்றாண்டுகளில் வளமோடு மிளிர்ந்து, சிறப்பும் புகழும் பெற்று மேலும் வளர குலதெய்வமாகிய நடுத்தோட்டப்பிள்ளையாரை வேண்டி என் இதயபூர்வமான வாழ்த்துக்களை எங்கள் சங்கத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்பாடசாலையில் கல்வி கற்று வெளியேறி வெளிமாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் பழைய மாணவர்களே, பாடசாலையின் வளர்ச்சியும் முன்னேற்றமும் கருதி உங்களால் இயன்ற பங்களிப்பினைச் செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

நன்றி

சு.சுபாங்கினி. தலைவர், பழைய மாணவர் சங்கம்.

### பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி

வெள்ளிவிழாக்காணும் எமது யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் உன்னதமான அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றியதன் காரணமாக இன்று 25ஆவது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் அளவிற்கு வளர்ந்துள்ளமை எம்மையெல்லாம் மிகவும் பூரிப்படையச் செய்துள்ளது. அனைத்து நல்ல செயற்பாடுகளிலும் முன்னேற்றம் அடைந்து சிறந்த ஆரம்ப பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக உருவாகியுள்ளது என்று கூறினால் மிகையாகாது. இவற்றிற்கெல்லாம் காரணம் கல்லூரி வளாகத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் நடுத்தோட்டத்து இராஜவரோதய விநாயகப் பெருமான் ஆவர். மேன்மேலும் வளர்ச்சியடைந்து நல்ல பெயரோடும், புகழோடும், பிரகாசிக்க வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.

நா. கமலநாதன். பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## பாடசாலை

அன்பே வாழ்வு என்ற பாடசாலையின் மகு
மரையில் ஒருகையிலே ஏட்டினைத்தாங்கி, மறு
துக்கே அதிபதியாகிய சரஸ்வதித்தாய் வீற்றிரு
உணர்த்தும் ஒலிம்பிக் தீபம் சுடர்விட்டு ஒளிர, ம
வலைப் பின்னல் உலகத்தின் கோலத்தைக் கா
யாழைக்காட்டி எழில்கொஞ்சும் பச்சை
வெளிவந்துள்ளது. எமது பாடசாலை இலச்சி

அன்பின் வழியது உ
கல்வியின் உயர்ச்சி
மண்ணின் மாண்பு
...த்தியாலயம் அ
இ

## பாடசாலையின் வரலா

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் வளவுக்குள்ளேயே அதன் தென் கிழக்
தொடக்கம் கல்லூரியிலிருந்து பிரிக்கப்பட்டு தனித்தியங்கி வருகின்றது. 1979.01.01 தொ
நல்ல சுபநேரத்தில் அதன் முதல் அதிபராகத் திருமதி யோகம்மா விக்கினேஸ்வரா அவ
மாணவர்களுடனும் பாடசாலையை நடத்தினார். அதிபர் அவர்களின் மன உறுதி, அர்ப்பணி
நலன்விரும்பிகள் போன்றோரின் நிறைவான ஒத்துழைப்புகள், கல்வித் திணைக்கள
பல்துறைகளிலும் முன்னேற்றம்கண்டு, பிரபல்யம் அடைந்து வருவதற்கு உறுதுணை

1979 இல் 70'X 20' அளவு கொண்ட அறையிலும் 1980 இல் 70'X 20' அளவு கொண்ட
மாடி நிறைவு பெற்று வகுப்புகள் நடைபெற்றன. தளபாடப் பற்றாக்குறை காரணமாக 1980
இல் முதன் முதலாகக் கழுத்துப்பட்டி மாணவர்களுக்கு அணிவிக்கப்பட்டது.1986.07.10
கவிஞர் நவாலியூர் பா.சத்தியசீலன் அவர்கள். மகுடவாசகம் "அன்பே வாழ்வு" என்பத
புதிய பாதை /வாசல் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்டது. 1983 -1994 அரசியல் நெ
இணைக்காலத்திட்டச் செயற்பாடுகளிலும், பௌதிக்கல்வி அபிவிருத்தியிலும் முன்னேற
நிகழ்வுகளால் பாடசாலை மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தபோதும், படிப்படியாகவும்
ஆற்றியது. 1996 இல் தற்போதைய அதிபர் திருமதி தனரஞ்சனி துரைசிங்கம் அவர்கள் பத

**பாடசாலை முன்னேற்றச் செயற்பாடுகள்:**

**பௌதீகவள விருத்திச் செயற்பாடுகள்**

**01. நீர்வசதி, மலசலகூடவசதி, மின்சாரவசதி, கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்ப**

**02. தளிப்பட்ட உதவிச் கோரிப்பு ஊடாக, நூலகத்திற்கான தமிழ், ஆங்கில நூல்கள் செயற்பாட்டறை புனரமைப்பு, விளையாட்டு முற்றம், பூந்தோட்டம் அமைத்தமை , பல பாடசாலைச் செயற்பாடுகளில் ஒன்றிணைத்தமை, மேலைத்தேச வாத்தியக் கருவிக பயிற்சி வழங்கியமை.**

**மாணவர் உருவாக்கல் விருத்திச் செயற்பாடுகள்**

01. வாரத்திற்கு ஒருநாள் புதன்கிழமை சுகவாழ்வு தொடர்பாகவும், வியாழன் ஆ
02.வகுப்பு ரீதியாக ஆங்கில மொழி அபிவிருத்திக்கு விசேட செயற்பாடுகள் மேற்
03.மாணவர் முன்னேற்ற ஆலோசனைக்காக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்
04.வருடாந்தம் பரிசளிப்புவிழாவை ஆவணப்படுத்தலான வகையில் ஒழுங்குபடு
05.விளையாட்டுச் செயற்பாடுகளில் பங்குபற்றலை உறுதிப்படுத்தல்.
06.திணைக்கள ஆங்கில, தமிழ்த்தினப் போட்டிகளில் அதிக வெற்றிகளைப்பெற
07.சிறுவர் அரங்கப் பாடசாலைமட்டத்து ஆற்றுகைப்படுத்தல், மா...ணமட்ட வெ
08.கல்வி அபிவிருத்தியில் அதி உச்சப்பயனைப் பெறுவதற்கான செயற்பாடுகளை
09.மாணவர் முதல்வர்சபை செயற்படுத்தப்பட்டு, மாணவர் மத்தியில் ஒழுக்கத்தி
பாடசாலைகளில் கல்வி கலாசாரங்களைப் பேணுதல், தலைமைத்துவப் பங்களிப்பை

இன்று மழலைகளின் மகிழ்ச்சியூட்டும் கலைக்கூடமாக யாழ். மாவட்டத்துச் சைவ ச
பாடசாலையாகச் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டு இருக்கின்றது.

## இளமையில் கல்வி சி

யாழ் .இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை வெள்ளிவிழாக் காண்கின்றது என்பதையிட்
இப்பாடசாலை கடந்த இருபத்து ஐந்து ஆண்டு காலமாக யாழ்ப்பாணத்தில் இந்துச் சிறுமி
அமைய, உறுதியான அடித்தளம் இட்டு அவர்களின் இடைநிலை மற்றும் உயர் கல்வி

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை ஆகியவற்
மாணவிகளின் வளர்ச்சியிலும் நாம் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளோம்.

எமது யாழ்நாத சஞ்சிகை எங்கள் சங்க செயற்பாடுகளை வெளிக்கொண்டு வரும்
உலகளாவிய ரீதியிலுள்ள மற்ற பழைய மாணவிகள் சங்கங்களும் பழைய மாணவ
வளர்ச்சியை வளமாக்கும் வண்ணம் www.jhlc.lk என்ற இணையத் தளத்தையும்

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை இவ்வெள்ளி விழாக்கொண்டாட்டங்களைச் சி
ஆற்ற அருள்செய்ய வேண்டும் என்று அருட்கடலாகிய இறைவனை எங்கள் சங்க அ

திருமதி சிவகாமி அம்பலவாணர் கௌரவ செயலாளர்,ய


சிறப்பிதழ் அனுசரணை:



சிறிராம் ஜீவல்லர்ஸ்
193. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 5280, 0777-730567



சிறிஅமலா ஜீவல்லர்ஸ்
74/1. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# ...ளிர் ஆரம்பப் பாடசாலை

## ...ப்புமலர் -20-11.2004

## ...லை இலச்சினை

...பாடசாலையின் மகுடவாசகத்தை ஏந்தி, திறந்த புத்தகத்தின் மத்தியிலே வெண்டா
...லைத்தாங்கி, மறுகையிலே கானம் இசைக்கும் வீணையை மீட்டி கல்விச் செல்வத்
...வதித்தாய் வீற்றிருந்து அருள் பாலிக்க ஒரு புறம் விளையாட் டின் மகிமையை
...சுடர்விட்டு ஒளிர, மறுபுறம் தொழில்நுட்ப வளர்ச்சிகண்டு மிளிரும் சுருங்கிவிட்ட
...தின் கோலத்தைக் காட்ட, இவற்றுக்கெல்லாம் தலையா கப் பெயர் வரக்காரணமான
...காஞ்சும் பச்சை வர்ணக் கொடியில் பாடசாலைப் பெயரைத் தாங்கி
...பாடசாலை இலச்சினை.

...பின் வழியது உயிர்நிலை உயிரின் உயர்வு கல்வி
...வியின் உயர்ச்சி கட்டுடல் வளர்ச்சி
...ாணின் மாண்பு தொழில்நுட்ப மேன்மை
...தியாலயம் அவாவும் வாழ்வியல் நோக்குகள்
இவையே.

## ... வரலாற்றுப் பாதை

... அதன் தென் கிழக்கு மூலைப் பகுதியில் அமைந்துள்ள இப்பாடசாலை 1979.01.01
...து. 1979.01.01 தொடக்கம் ஆரம்பப் பாடசாலையின் நிர்வாகம் வேறாக்கப்பட்டபோது
...கினேஸ்வரா அவர்கள் இப்பாடசாலையைப் பொறுப்பேற்று 5 ஆசிரியர்களுடனும், 153
... உறுதி, அர்ப்பணிப்பு, விடாமுயற்சி அப்போது இருந்த ஆசிரியர் குழாம், பெற்றோர்கள்,
...ல்வித் திணைக்களத்தின் பங்களிப்புகள் போன்றவை இப்பாடசாலை படிப்படியாகப்
...பதற்கு உறுதுணையாக இருந்தன.
... 20' அளவு கொண்ட அறையிலும் வகுப்புகள் நடைபெற்றன. 1983இல் 50'X 25' மேல்
... காரணமாக 1980 இல் 130 மாணவர்கள் நிலத்தில் இருந்து கற்று வந்தார்கள் . 1983.05.11
...ட்டது.1986.07.10 இல் பாடசாலைக் கீதம் இயற்றப்பட்டது. இயற்றியவர் குழந்தைக்
...ப வாழ்வு" என்பதாகும். 1982.06.14 இல் இந்து மகளிர் ஒழுங்கையில் அமைக்கப்பட்ட
...1994 அரசியல் நெருக்கடிகள் எதிர்நோக்கியகாலம், எனினும். கல்வி அடைவுகளிலும்,
...பிலும் முன்னேற்றம் காணப்பட்டே வந்துகொண்டிருக்கிறது. 1995இல் இடம்பெற்ற
..., படிப்படியாகவும் ஒழுங்கமைக்கப்பட்டு வருவதற்கு அபிவிருத்திகள் தனது பங்களிப்பை
...ங்கம் அவர்கள் பதவியேற்றார்.

...மைப்புச் செய்யப்பட்டமை.
... ஆங்கில நூல்கள், கட்புல, செவிப்புல சாதனங்கள் பெறப்பட்டமை. முதன்மைநிலை/
...அமைத்தமை, பழைய மாணவர் சங்கம் சிறப்புற இயங்குவதற்கு வழி அமைத்து
...வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்து பாடசாலை இசைக்குழுவை அமைத்துப்

...ும், வியாழன் ஆன்மீகம் நற்பண்புகள் தொடர்பாகவும் கருத்துரை வழங்குதல்.
...பற்பாடுகள் மேற்கொள்ளல்.
...ள்ளிக்கிழமையும் பெற்றோர் சந்திப்பை மேற்கொள்ளல்.
...கயில் ஒழுங்குபடுத்தல்.
...த்தல்.
...பற்றிகளைப்பெற ஊக்குவித்தல்.
...மாகாணமட்ட வெற்றிகளைப்பெற ஊக்குவித்தல்.
...ா செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
...தியில் ஒழுக்கத்தினையும், கட்டுப்பாட்டினையும், நிலைநாட்டுதல்.
...துவப் பங்களிப்பை விருத்திசெய்தல்.
...வட்டத்துச் சைவ சூழலில் வளர்த்தெடுக்கப்படுகின்ற பெண் சிறுமியருக்கான ஆரம்பப்

## ...ல்வி சிலையில் எழுத்து

...ன்றது என்பதையிட்டு எங்கள் சங்க அங்கத்தவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.
...தில் இந்துச் சிறுமிகளின் கல்விக்கு "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கு
...றும் உயர் கல்வி சிறப்புற அமைய உதவி வருகின்றது.
...சாலை ஆகியவற்றின் வளர்ச்சியிலும் இந்தக் கல்விக்கூடங்களில் கல்வி கற்கும்
...ம்.
...க்கொண்டு வரும் ஓர் ஆவணமாக ஆண்டிற்கு ஒருமுறை மலர்கின்றது. அத்துடன்,
... பழைய மாணவிகளும் ஒருவருடன் ஒருவர் தொடர்புகொண்டு இக்கல்லூரிகளின்
...ாயத் தளத்தையும் உருவாக்கி உள்ளோம்.
...டாட்டங்களைச் சிறப்பாக நடத்தி மேலும் வளர்ச்சியடைந்து தனது அளப்பரிய பணியை
... எங்கள் சங்க அங்கத்தவர்களுடன் சேர்ந்து துதிக்கின்றேன்.

... செயலாளர்,யாழ்.இந்து மகளிர் கல்லூரி, ப.மா.ச.. கொழும்பு.

## வாழ்த்துச் செய்தி



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் இந்துசமய எழுச்சிப் பிரசாரத்துடன் யாழ்ப்பாணத்தில் தோற்றுவிக்கப்பட்ட இந்துப் பாடசாலைகளில் பல இன்றும் அந்தப் பாரம்பரியத்தைப் பேணி வருகின்றன.

அந்தவகையில், யாழ்ப்பாணத்தில் மகளிருக்காகத் தோற்றுவிக்கப்பட்ட யாழ். இந்து மகளிர் கல்லூரியாக இருந்து யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை நிர்வாக ரீதியாகப் பிரிந்து இன்று 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

இந்த 25 ஆண்டு காலத்தினுள் 147 மாணவர்களுடனும் 5 ஆசிரியர்களுடனும் தனது கல்விப் பணியை முன்னெடுத்து வைத்த இப்பாடசாலை இன்று 16 ஆசிரியர்களுடன் சுமார் 550 மாணவர்களைக் கொண்ட ஒரு முன்னணிப் பாடசாலையாக இயங்கி வருவது பெருமைக்குரியது.

கடந்த இருபத்தைந்து வருடங்களாக இப்பாடசாலை உருவாக்கி வைத்த கல்விப் பரம்பரையின் தொடர்ச்சியானது நாடளாவிய ரீதியில் யாழ் .இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் பெருமையைப் பேசி வருகின்றது.

அதன் இரண்டரை தசாப்தகால வளர்ச்சிப் பாதையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இரு அதிபர்களையும், பல ஆசிரியர்களையும் நன்றியுடன் நினைவு கூரும் விழாவாக வெள்ளி விழா நிகழ்வுகள் அமைய வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளிலும், பல்வேறு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சாதனைகள் படைத்து முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக உருவாக்க உழைத்துவரும் யாழ். இந்து மகளிரின் கல்விச் சமூகம் மேலும் மேலும் இப்பாடசாலையின் உயர்ச்சிக்காக உழைத்துவர வேண்டும். அதனூடாக யாழ்ப்பாணத்தில் கல்வி கற்ற இந்துச் சமூகத்தின் தோற்றத்திற்கான தொடர்ச்சியை நிலை நிறுத்த முடியும்.

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் வெள்ளிவிழா நிகழ்வுகளும், அது தொடர்பாக வெளியிடப்படும் சிறப்பு மலரும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

மாகாணக் கல்வித்திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணம்,திருகோணமலை.
**இ.விசாகலிங்கம்,மாகாணக் கல்விப் பணிப்பாளர்.**

## இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் 25 ஆவது சந்தன விழா உயர்கவே



நதிகளின் சோலையில் சைவமும் தமிழும் கீதம் பாடும் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் வெள்ளிவிழா மகிழ்விற்கு வாழ்த்துச்செய்தி வரைவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். ஒரு விருட்சத்தின் நிழலில் ஆரம்பக்கல்வியை நாற்றாக்கி நடவு செய்து 01.01.1979 தொடக்கம் 2004 வரை கல்விப்பாதையில் வெற்றிகள் குவித்துள்ளது. ஓய்வு பெற்ற அதிபர் திருமதி எஸ்.யோகம்மா தொடக்கம் இன்றைய அதிபர் திருமதி தனரஞ்சினி துரைசிங்கம் வரையும் புலமைப்பரிசிலின் பெறுமதியில் நிறைவாகி வெற்றிகளைச் சேர்க்க, வென்ற மாணவிகள் உயர் நிலைக்கல்வியால் சிறு அரும்பான இந்து மகளிர் பாடசாலை பெருமதிப்புக்களைக் குவித்துள்ளது. அதிபர்களின் ஆளுமை வெற்றியின் எல்லைகளைத் தொடும் நேரம் யாழ்ப்பாண வலயம், கல்வியில் உச்சப் பெறுமானத்தை நுகர்கின்றது. பெண்பிள்ளைகளுக்கான பொன் பள்ளியான இப்பாடசாலை புலமைப் பரிசிலுக்கு அப்பால் கணனிக் கல்வியில் மழலைகளை ஈர்க்கும் நுகத்தடியாக யாழ்ப்பாணத்தில் புகழ்பொறிக்க வாழ்த்துக்கள்.

**ப.விக்னேஸ்வரன்**,வலயக்கல்விப்பணிப்பாளர்,வலயக்கல்வி அலுவலகம்,யாழ்ப்பாணம்.

## ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம்-இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலையின் வெள்ளிவிழாச் சார்பாக வெளிவரும் சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலை பல வசதிகள் இல்லாதிருந்தும் அதிபர், ஆசிரியர்கள்,பெற்றோர்கள் முயற்சியால் முன்னேற்றம் அடைந்து வருவது பாராட்டற்குரியதாகும். சிறுவயது முதல் பண்புநிறைந்த மகளிர்களை உருவாக்குவதற்கு இப்பாடசாலை இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையாக அமைந்து விளங்குவது சைவத்தமிழ் உலகிற்கு சிறப்புடைய அம்சமாகும்.

சைவபரிபாலன சபையாரால் நடத்தப்பட்ட பண்ணிசைப்போட்டி, சைவநெறித்தேர்வு என்பனவற்றில் முதற்பரிசாகிய தங்கப் பதக்கப்பரிசுகளை மாணவர்கள் பெற்றுள்ளமை மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். தற்போதைய அதிபரின் சிறந்த தலைமைத்துவ நிர்வாகத்தின் கீழும் பாடசாலை சமூகத்தின் ஒன்றிணைந்த கட்டுக்கோப்பின் கீழும் யாழ்ப்பாணத்தில் தனித்துவமான பாடசாலையாக மேலும் வளர்ச்சியடைய இறையருள் வேண்டி எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்கி அமைகின்றேன்.

சுபம்

சைவப்புலவர் **வ.கந்தசாமி.**

## நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



இருபத்தைந்து வருடகால கல்விப்பணியினை மேற்கொண்டு வருகின்ற இந்த ஆரம்பப் பாடசாலையானது யாழ்.மாவட்டத்திலே விரல்விட்டு எண்ணக்கூடிய மிகச்சிறந்த ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்றது. கல்விப் பணிகளுடன் மாணவர்களுடைய பல்வேறு கலையாற்றல்களையும் ஒழுக்க விழுமியங்களையும் வளர்ப்பதிலும் இப்பாடசாலை சிறப்பானதொரு இடத்தை வகித்து வருகின்றது.

பாடசாலைகளுக்கிடையே நடைபெறுகின்ற கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்ட தமிழ்மொழித்தினப் போட்டி, ஆங்கிலதினப் போட்டிகளில் பங்குபற்றி பல வெற்றிகளையும் பெருமையினையும் தனதாக்கியுள்ளது. இது மட்டுமன்றி புலமைப்பரிசில் பரீட்சையிலும் யாழ். மாவட்டத்தில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்கின்ற பாடசாலைகளுள் இப்பாடசாலையும் ஒன்றாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான வளம் மிக்கதொரு அறிவியல் சார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதில் முனைப்புடன் செயற்படுகின்ற அதிபர் மற்றும் ஆசியர்கள் யாவரும் பாராட்டுக்குரியவர்கள். இப்பாரிய பொறுப்பினை ஏற்று அதனைச் சிறப்பாகச் செயற்படுத்தி வருகின்ற இப்பாடசாலையானது, இன்று வெள்ளிவிழாவைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். மேன்மேலும் இப்பாடசாலை சகல துறைகளிலும் வளர வேண்டும் என மனமார வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**திருமதி ச.காங்கேயன்**, கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்.

## தாய்ப்பாடசாலை அதிபரின் வாழ்த்துச்செய்தி



யாழ் .இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை தனக்கென ஒரு கட்டமைப்பில் கல்விச் சேவையை 25 வருடங்களாக வழங்கி வருவது பெருமைக்குரியது. யாழ்.இந்து மகளிர் கல்லூரி இடைநிலைக்குரிய கல்வி நிறுவனமாகவும் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை ஆரம்பக் கல்விக்குரிய நிறுவனமாகவும், பிரிந்து நின்று செயற்பட்டு வருகின்றன. யாழ் முன்னணி ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்றான இது சிறுவர்களின் பண்பாட்டினை வளர்க்கும் களமாக மிளிர்வதனையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ். நகரில் அமைந்துள்ள இந்த ஆரம்பப் பாடசாலையில் இடம்பிடிக்க பலர் ஓடி வருவதில் இருந்து இப்பாடசாலையின் சிறப்பு நமக்குத் தெரிகிறது. என்றும் எக்காலமும் எமது கலாசாரப் பின்னனி வழுவாது நிற்கக்கூடிய எதிர்காலத் தலைவிகளை உருவாக்கவல்ல பெண்களை சின்னஞ்சிறு வயதினிலேயே வளர்த்தெடுக்கும் பொறுப்பு எமக்குண்டு என்பதனை உணர்ந்து, இந்த ஆரம்பப் பாடசாலையை ஆரம்பித்து அதன் வளர்ச்சிக்கு உழைத்த பெரியார் அனைவரும் என்றும் போற்றுதற்குரியவர்கள்.

ஒரு மரத்திற்கு வேர்போல் ஒருவருக்கு ஆரம்பக் கல்வி உறுதியானதாக அமைந்திருக்க வேண்டும் என்பதனை நன்கு உணர்ந்து இதுவரை கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் செயற்பட்டனர். அனைவரது நோக்கமும் சிறப்பாக நிறைவேறி வருவது மகிழ்ச்சிக்குரியதே.

தெளிந்த நல்லறிவும் நெஞ்சிலே உறுதியும் கொண்டவர்களாகவும்,மதப்பற்று, மண்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்றுக் கொண்ட பெண்களாகவும் மிளிரும் பலரை மேலும் மேலும் இப்பாடசாலை உருவாக்க வேண்டும் என வெள்ளிவிழாக் காணும் இந்நாளில் மனதார வாழ்த்துகிறேன்.

**திருமதி சரஸ்வதி ஜெயராசா** அதிபர், யாழ் இந்து மகளிர் கல்லூரி. B.A HONS Dip.inEdu.SLPS-I




# யாழ்ப்பாணம் மாநகரசபை
## 2005ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/உற்பத்தியாளர்/ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 27-12-2004 ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

<u>பொருள்கள்</u>

1) காகிதாதிகள், எழுதுபொருள்கள்
2) அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள், இரும்பு அலுமாரி)
3) மேல்நாட்டு மருந்து வகைகள், வைத்திய உபகரணங்கள்
4) சித்த மருத்துவ மருந்துகள்
5) கோலவுடைத்துணிகள், யன்னல் துணிகள் ஏனைய துணிவகைகள்
6) பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோற்பொருள்கள்
7) கட்டடப்பொருள்கள் (சீமெந்து, ஓடுகள் முதலியன)
8) தீந்தைகள், நிறந்தீட்டும் பொருள்கள் முதலியன
9) கற்கள், மணல்கள்
10) நீர் வழங்கு பொருள்கள், பி.வி.சி.குழாய்கள் முதலியன
11) வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணைஉறுப்புகள்
12) மின்சார இயந்திரப் பொருள்கள், மின்கருவிகள்
13) விறகு, தேங்காய் மட்டை, கிடுகுகள்
14) எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ்
15) இரும்புப் பொருள்கள்
16) பனை மரங்கள், சலாகைகள்
17) நூலகங்களிற்குரிய நூல்கள்
18) வாகனங்களிற்கான பற்றரிகள், ரயர், ரியூப் முதலியன
19) திராந்திகள், றிப்பைகள், பலகைகள்
20) தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக்கயிறு முதலியன
21) சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமிநாசினிகளும், மருந்துகளும்.
22) கணனி, கணனிகளிற்கான உதிரிப்பாகங்கள், போட்டோப் பிரதி இயந்திரம், போட்டோ பிரதியந்திரத்திற்கான (கனன், சார்ப் வகைகளிற்கான) உதிரிப்பாகங்கள் வழங்கல்.

<u>சேவைகள்:</u>

1) அச்சிடுதல்
2) தட்டச்சு இயந்திரம் திருத்தம்
3) மோட்டார் வாகனங்கள் திருத்தம்
4) ரியூப் ஒட்டுதல் (வாகனங்கள்)
5) ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
6) ஏற்றியிறக்கல் வேலைகளிற்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல் (சுத்திகரிப்பு வேலைப்பகுதி ஏற்றியிறக்கல் வேலைக்கு ரக்ரர் வாடகைக்கு விடல்)
7) கோலவுடை தைத்தல்
8) மின் மோட்டர்கள், மின்விசிறிகள், ஜெனரேற்றர்கள், குளிர்சாதனப்பெட்டிகள் திருத்தம்
9) மின்கலங்களிற்கு மீள மின்வலுவூட்டல்
10) றப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்
11) வாகனங்கள் சேவிஸ் செய்தல்
12) கணனி இயந்திரம், போட்டோப் பிரதி இயந்திரம் திருத்தம், சேவிஸ் செய்தல்.

கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் *"வழங்கலகள், சேவைகள் 2005"* எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்க வேண்டும்.

வழங்கல்களுக்கும், சேவைகளிற்குமான விண்ணப்பங்கள் *"ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்"* என முகவரியிடப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல், சேவைகளுக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்களை யாழ். மாநகரசபை கொள்வனவுப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக (ரூபா180/-உடன் மேலதிகமாக வற்வரி ரூபா 27/-) ரூபா 207/- பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளை *"ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம"* என்ற பெயருக்கு பெறப்பட்டு இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். பணமாகச் செலுத்தவிரும்புபவர்கள் சபையின் நானாவித இறைவரிக் கிளையில் நேரடியாக வேலைநாள்களில் செலுத்தமுடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து கோரப படும்.

கோரப்படும்பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள்கள், சேவைகள் வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள், சேவைகள் வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப்புத்தகத்தில் இருந்து நீக்கப்படும்.

கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

திகதி: 15-11-2004
(சி-39159) (26-16-45)

## அதிபர், ஆசிரியர்களுக்கு விசேட செயலமர்வு

தென்மராட்சி,நவ.20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களுக்கான விசேட கல்விச் செயலமர்வுகள் இருநாள்கள் நடைபெறவுள்ளன.

ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் - அதிபர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை வரணி ஆசிரிய மத்திய நிலையத்திலும் - நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (3-203-117)

## யாழ். பொதுநூலகத்துடன் சுண்டுக்குளி இணைகிறது

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ். நூலகத்தின் கிளையான சுண்டுக்குளிக் கிளைநூலகம் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் யாழ். நூலகத்துடன் இணைக்கப்படவுள்ளது.

இந்தக்கிளை மாற்றத்தினால் சுண்டுக்குளி நூலகத்தின் அங்கத்தவர்கள் எதுவித மேலதிக கட்டணமுமின்றி யாழ். நூலகத்தில் அங்கத்தவர்களாக இணைக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (3-202)

## பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்

எமது ஞானக்குழந்தை கல்விக் கழகத்தில் 2004ஆம்ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் நாளை (21. 11. 2004) ஞாயிறு காலை 10. 00 மணிக்கு கல்விக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

அனைவரும் தவறாது சமுகந்தருமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

ஞானக்குழந்தை கல்விக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

இயக்குநர்.
(38716)(42)

## 6ஆம் மாத நினைவஞ்சலி

தோற்றம் 05 - 04 - 1945



மறைவு 20 - 05 - 2004

அமரர் **முத்துச்சாமி பத்மநாதன்**

(உரிமையாளர், றிக்கோ ஹோட்டல் )

அன்புக்கும் பண்புக்கும் பாசத்துக்கும்
இலக்கணமாய் இருந்த எங்கள் அப்பாவே!
மூவிரண்டு மாதங்கள் ஆனாலும் எம்மனதில்
தீபமாய் விளங்கிடும் ஒளி விளக்கே!
காலில் இட்டபந்தாய்க் கலங்குகின்றோம் நாம் இங்கு
ஆயிரம் உறவுண்டு ஆனால் அப்பா என்றழைக்க
யாருமில்லை? ஆறாது எம் துயர்
உங்கள் அன்பு எங்கள் நெஞ்சங்களில்
என்றும் நீக்கமின்றி நிறைந்திருக்கும்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
மெய்ப்பொருளை வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
பாசமிகு மனைவி, மகள், மகன்மார்,
மருமகன், பேர்த்தி.

22/3A, விதானையார்வீதி,
சுண்டிக்குளி.

(38735)(39-16-45-26)


## விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்

இந்திய மத்திய அரசு அங்கிகாரம் பெற்ற நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
சேலம் - 636 308, தமிழ்நாடு, இந்தியா.
தாய்லந்து அரசு அங்கிகாரம் பெற்ற பாங்கொக், தாய்லாந்து
Rangsit பல்கலைக்கழகம் இணைந்து நடாத்தும்
இளநிலை மருத்துவ பட்டப்படிப்பு

**International Off-Shore Medical Program - MBBS**

முதலாவது கற்கைநெறி அனுமதி அறிவிப்பு - (2004 - 2005)

<u>இக்கற்கைநெறி</u>

- முதல் இரண்டு ஆண்டு மருத்துவக்கற்கை நெறி, மற்றும் பயிற்சி வகுப்புக்கள் தாய்லாந்து Rangsit பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடாத்தும்.
- அடுத்து 2 -1/2 ஆண்டு மருத்துவ கற்கை நெறியும் பயிற்சியும், ஓராண்டு உள்ளகப் பயிற்சிநெறியும் இந்தியா, தமிழ்நாடு விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவன மருத்துவக் கல்லூரியிலும் நடைபெறும்.
- மேற்படி கற்கைநெறிகள் யாவும் இந்திய மருத்துவக் கழகத்தின் (Medical Council of India) ஒழுங்கமைப்பிற்கு ஏற்ப நடாத்தப்படுகின்றது.
- விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம், (நிகர்நிலைப் பல்கலைக்கழகம் - **Deemed University) M.B.B.S** பட்டத்தினை வழங்கும்.

<u>தகைமைகள்</u>

- இலங்கை அல்லது வெளிநாட்டு மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் (அல்லது அதற்கு சமமானது)உயிரியல், இரசாயணவியல், பௌதீகம் ஆகிய பாடங்களில் ஒரே தடவையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு

பதிவாளர் - விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்

<u>சேலத்தில்</u>
NH-47, Sankari Main Road,
Ariyanoor, Salem 636 308,
☎ 91 427 2477316, 317,833
Fax: 91 427 2477903
E-mail: vmrf@vinayakamissions.com

<u>சென்னையில்</u>
160 (208), Poonamalee High Road,
Kilpauk, Chennai : 600 010
☎ 91 44 2825 5060, 2811, 3776
Fax : 91 44 28241708
Email: admissions@vinayakamissions.com

www.vinayakamission.com & www.isu.ac.th

இலங்கை ஒருங்கிணைப்பாளர்

**nn educonsult**
181/1 W.A சில்வா மாவத்தை, கொழும்பு 06.
☎ 011 555 88 33, Fax : 011 555 88 44, Email: nnconsult@sltnet.lk

Piccaso

மீண்டும் அரியவாய்ப்பு யாழ். நகரில்

**Spot admissions**
**on 21st, 22nd November 2004**
(ஞாயிறு, திங்கள்)
**at. 411, K.K.S. Road, Jaffna.**
(சிவத்தொண்டர் நிலையத்திற்கு எதிரில்)

# நூல் விரிசை



நூல் : கவிவானம் பொழிகிறது
ஆசிரியர் : அகியோபி
அச்சுப்பதிப்பு : மதுரன் கிறாப்பிக்ஸ், அல்வாய்.

அகியோபி என்ற புனைப்பெயரைக் கொண்ட வதிரியூர் வேலாயுதம் அகிலனின் 'கவிவானம் பொழிகிறது' என்ற கவிதைத் தொகுப்பு நூல்வடிவில் வெளியாகியுள்ளது.

எண்பது பக்கங்களைக்கொண்ட இந்தப் புத்தகத்தில் அகிலனின் ஐம்பத்தியைந்து முத்தான கவிதைகள் வெளிவந்துள்ளன. ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் தன்னை மட்டுப்படுத்திக்கொள்ளாது தற்கால மனித நடத்தைகளின் அனைத்து அம்சங்களையுமே அவர் இந்த கவிதைகளுள் அடக்கியுள்ளார்.

அகிலனின் கவிதைகளுள் உள்ளமுங்கிய ஒரு நகைச்சுவையுணர்வு (grim humour) விரவிக் காணப்படுகின்றது. அந்த உள்ளமுங்கிய நகைச்சுவையுணர்வூடாக நாம் சிந்தித்து சீர்திருத்த வேண்டிய பல கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார்.

அவஸ்தைகள் என்ற கவிதையிலிருந்து சில வரிகள்
'சம்பளத்திலொரு கம்பளமாவது வாங்குவதற்கு
சக்தியுண்டாவென்று சம்சாரம் மின்சாரமாவாள்'

என்ற வரிகள் மூலம் அடங்காப் பெண்டிரின் நடத்தைக் கோலங்களை வெளிப்படுத்துகின்றார்.

"வெட்கம், வெட்கம்" என்ற கவிதையில் சில வரிகள்
'இருபத்து நான்கு மணிநேர மின் விநியோகத்துக்காகவா?
ஏ-9 திறப்பதற்காகவா?.
சுற்றுலா செல்வதற்காகவா?
இல்லை. இல்லை இல்லவே இல்லை....
இந்த மண் ஏன் இரத்தம் சிந்தியது?'

என்ற வரிகள் மூலம் தேசம் அழுத காலத்தை மறந்து எதிரிகள் போடும் உல்லாச வலைகளுக்குள் எமது மக்கள் சிக்கிவருகிறார்கள் என்ற கருத்தைச் செப்புகிறார்.

"இங்கு காணாமல் போனவன் தமிழன் மட்டுமல்ல்
அவன் பண்பாடும் தான்!"

என்றவரிகள் மூலம் வெளிநாட்டு மோகத்தால் கபளீகரம் செய்யப்படும் எமது தமிழ்ப் பண்பாட்டின் நிலையை எண்ணி விம்முகிறார்.

" நீங்கள் வெறும் சிந்தனைச் சிற்பிகள்ல்ல
நாளைய தீர்ப்பினை எழுதும் எழுதுகோல்கள்
நீங்கள் சிந்தும் ஒவ்வொரு மைத்துளியும்
நாளை ஒவ்வொரு வரலாறுகளாகும்"

என்ற வரிகள் மூலம் ஆசிரிய சமூகத்தின் மகத்துவத்தை எடுத்துயம்புகிறது

தற்கால மனித நடத்தைக்கோலங்களை தத்துவார்த்தமாக எடுத்துக்காட்டியிருக்கின்றார் அகிலன். இவருடைய கவிதைகளில் உள்ள இன்னொரு சிறப்பு என்னவென்றால் எளிய நடை, எளிய மொழி பாமர மக்களுக்கும் இவரது கருத்துக்கள் சென்றடையும். பண்டிதத்தனம் அல்லது வித்துவத்தனம் இவருடைய கவிதைகளில் இல்லை. எளியநடை மூலம் ஆழ்ந்த கருத்து என்பதே இவரின் கோட்பாடாகும்.

மொத்தத்தில் இளங்கவிஞராக இருந்தாலும் அவரது சிந்தனைகளும் சமூகப் பார்வைகளும் முதுர்ச்சியடைந்த ஒரு கவிஞனுக்குரிய பரிமாணங்களைக்கொண்டிருப்பதை அவரது கவிதைகளில் எம்மால் காணமுடிகிறது.

இப்புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி திரு.செ.திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டது போல ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் அகிலனுடைய எழுத்துக்களும் சிறப்பாக ஒளிவீசும் என்று எதிர்பார்க்கலாம்.

- யாழ்.வதிரிவாசன்.





நூல்கள்: ★கணணியின் வரலாறு
★தட்டெழுத்து - தமிழ், ஆங்கிலம்
★ விசைப்பலகை
ஆசிரியர் : க.கமலசேகரம்
வெளியீடு: மகேஸ்வரி கணனி வள நிலையம்,
யாழ்.மத்தியகல்லூரி





உலகநாடுகளைப் பொறுத்துவரை விஞ்ஞானம் மிகவிரைவாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. ஆனால், எமது பிரதேசத்தில் தொழில்நுட்ப அறிவும் அதன் பயன்பாடும் மிகக் குறைவாக காணப்படுகிறது. இந்நிலையை நீக்கி அறிவியலை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மகேஸ்வரி மூலவள நிலைய ஆசியர் அ.கமலசேகரத்தால் கணனி சம்பந்தமான நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வானத்தைக் கிழித்து அறிவியல் பிறக்கிறது என்பதை விளக்கும் அட்டைப் படத்துடன் கணனி வரலாறு (HISTORY OF COM PUTER) என்னும் நூல் விரிகிறது.

உள்ளே, மனிதனது வரலாற்றுப் பின்னனி எவ்வாறு அறிவியலை வளர்த்தது, எவ்வாறு கணனி உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. ஆரம்பகாலத்தில் கணக்கிடப்பயன்படுத்திய இயந்திரங்கள் விளக்கப்படத்துடன், நூலை அலங்கரிக்கின்றன. கணனியின் பல்வேறு தலைமுறை தன்மைகளை ஒப்பிட்டு விளக்குவதோடு, கணனியின் செயற்பாட்டுக்கு வித்திட்ட வழிமுறைகள் வியக்க வைக்கிறது. கணனியின் வகைகள், கணனி வருகைக்கு வித்திட்டவர்கள் பற்றியும் இந்நூல் சொல்லத் தவறவில்லை.

மண்ணில், கல்லில், ஏட்டில், சிலேற்றில் இறுதியில் இன்றுவரை கடதாசியில் எழுதிப் படித்தவற்றை கணனியில், திரையில் அச்சடித்துப் பார்த்துப், படிக்க படிப்பிக்க வேண்டிய தேவை இப்போதுள்ளது. அனைவருக்கும் கணனி அறிவு இன்றைய உலகில் அவசிய தேவையாகிறது.

கணனி பற்றி அறிந்து கொள்ள, வேண்டிய தேவை இருக்கிறது. கற்கவேண்டிய அவசியமிருக்கிறது.

எப்படிக்கற்பது என்பதற்கு முன் அவற்றின் பாகம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளவேண்டும். கமலசேகரம் இவற்றையும் நிவர்த்தி செய்யும் நோக்குடன், கணினி விசைப்பலகை பற்றியும் அதில் தட்டச்சு செய்வது எப்படி? என்பது பற்றியும் விலாவரியாக விளக்கி நூல் வடிவில் தந்துள்ளார்.

கணனி விசைப்பலகை (Computer Keyboard) விசைப்பலகையின் படங்கள் தாங்கிய முகப்பு அட்டையுடன் காணப்படுகிறது.

உள்ளே விசைப்பலகையின், பயன்கள், செயற்படுத்தும் முறைகள், குறியீடுகள், ஆரம்ப விசை எழுத்துக்கள், வரைதல், அவற்றுக்கான பயிற்சிகள், இலகு தமிழிலும் ஆங்கிலத்திலும் அலங்கரிக்கின்றன.

இவ்விசைப்பலகையை பயன்படுத்தி சாதாரணமாக கற்கவேண்டிய துறையை ஆங்கிலம் என்ற ஊடக மொழி நிலைதடுமாறச் செய்துள்ளது. இந்நிலையை நீக்கும் முகமாக தட்டெழுத்து (TYPING) - தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழிகளிலும் நூல்களை தந்துள்ளார்.

இங்கு ஆங்கில எழுத்துக்களும், தமிழ் ஏழுத்துக்களும் எப்படி கையாளுவது என்பது தொடக்கம், பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

மொத்தத்தில் கணனி கையாளுவதற்குரிய வழிகாட்டிகளாய் இந்நூல்கள் அமையும் என்பதில் ஐயமில்லை.

- தயா.

# சதுரங்கத் துறைக்கு அளப்பரிய சேவை செய்தவர்

'அன்பும் பணிவும் அடக்கமும் ஒருங்கே சேரப்பெற்ற செல்லையா இரத்தினம் யாழ்ப்பாணம் சதுரங்க சம்மேளனம் 1998 இல் அங்குரார்ப்பணம் செய்து அரம்பிக்கப்பட்ட போது' முன்னணியில் நின்று சங்கச் செயற்பாட்டினை ஒழுங்குபடுத்தி நிலைபெற உறுதுணையாக விளங்கினார். அன்று முதல் உப தலைவராக விளங்கியதுடன் சங்கத்தின் அனைத்துச் செயல்களிலும் கரிசனையுடன் கலந்துகொண்டு காத்திரமான பங்களிப்பினை நல்கத் தவறியதில்லை. பாடசாலை வயதினிலேயே சதுரங்கத்தில் துடிப்பான ஈடுபாடு இருந்து போட்டிகளில் கலந்துகொண்ட தன்மையிருந்தபோதிலும், தொழில் ஆற்றுகின்ற காலங்களிலும் இந்த ஈடுபாடு தொடர்ந்தமையைக் காணக்கூடியதாகவிருந்தது. கொழும்பில் வேலை செய்கின்ற காலங்களில் வை.எம்.சி.ஏ. இல் நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். சிங்கள, தமிழ் முன்னணி விளையாட்டு வீரர்களுடன் சிநேக பூர்வமான விளையாட்டுக்களில விளையாடி வென்ற பல அனுபவங்களையும் கொண்டவராக விளங்கினார்.

யாழ்ப்பாண சதுரங்க சம்மேளனத்தின் உருவாக்கத்திற்கு முன்னரும் யாழ்ப்பாண சதுரங்கக் கழகத்தில் பொறுப்பான பதவி வகித்தவராக விளங்கிச் சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவினார்.

## நீத்தார் நயப்புரை

கடந்த வருட சதுரங்கப் பரிசளிப்பு, ஆண்டமர்வு வைபவத்தில் தனது உடல் நலிவுற்று இருந்த வேளையிலும் நாம் எவரும் எதிர்பார்க்காத வேளையில் பிரசன்னமாகி நிகழ்வில் பங்குபற்றியமை அனைத்து அங்கத்தவர்களிடையில் அன்னாரின் அர்ப்பணிப்பு மனப்பான்மையை எடுத்துக் காட்டிற்று. இவ்வாறு இச் சதுரங்கத்தில் அவர் கொண்டிருந்த அளப்பரிய ஈடுபாட்டினால்தான் இன்று பல வீரர்கள் தேசிய ரீதியில் ஈடுபட்டுத் தங்கள் திறமைகளை வெளிக்கொணருவதற்கான களம் அமைந்ததெனலாம்.

அவரது அளப்பரிய சேவைகளை மனதில் முன்னிறுத்தி இனிவரும் காலங்களில் வருடாந்தம் நடத்தும் சதுரங்கப் போட்டிகளை 'இரத்தினம் ஞாபகார்த்த சதுரங்கப் போட்டியாக' நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவரது இழப்பு ஈடு செய்யமுடியாத ஒன்றெனினும் அவர் சேவை அவரை என்றென்றும் எம் நினைவில் நிறுத்தி நிற்கும் என நம்புகின்றோம்.

- யாழ். சதுரங்க சம்மேளனம்.

# மக்கள் முகம்



புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவைச் சேர்ந்த சிவபாலன் குணபாலன் இலங்கை நிர்வாக சேவைக்கான திறந்த போட்டிப்பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன்முறையாக தெரிவாகி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களுக்குமான உதவித் தொழில் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் தமது ஆரம்பக் கல்வியை முல்லைத்தீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டார்.

1996 ஆம் ஆண்டு முதல் தேவிபுரம் அ.த.க. பாடசாலையிலும், புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்திலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். (3-353-204)

★ ★ ★



கோப்பாயைச் சேர்ந்த மறுமலர்ச்சி எழுத்தாளர் அமரர் பண்டிதர் ச.பஞ்சாட்சர சர்மாவின் மூன்றாவது புத்திரன் பிரம்ம ஸ்ரீ ப.சோமசேகர சர்மா பதுளை மாவட்ட மேல் நீதிமன்றத்தில் சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

(3-152)

★ ★ ★



2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தினத்தையொட்டி தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட பிரிவு IV இற்கான கவிதை ஆக்கப் போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த தரம் 10 மாணவியாகிய அனுஷானி அழகராஜா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் (9 ஆம் தரத்தில்) 'கவிதைத்துளிர்' என்னும் நூலை ஆக்கி வெளியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

★ ★ ★



மாவிட்டபுரத்தைச் சேர்ந்த செ.கந்த.சத்தியதாசன் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி வரும் இவர் சிறந்த சைவச்சொற்பொழிவாளர். சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் ஆகிய பட்டங்களையும் 'அருட்சொல்வாரி'என்ற கௌரவ பட்டதையும் பெற்றுள்ளார். அத்துடன், மாவை சிவநாதம் பட்டி மன்றக் குழுவின் அமைப்பாளரும் நடுவருமாவார். (3)

★ ★ ★

சிங்கப்பூர் முகாமைத்துவ நிறுவனம் (Singapore Institute of Management)- SIM) நடத்தும் முகாமைத்துவ செய்வகை நிபுணத்துவ கற்கையில் கலந்துகொள்ள தேசிய சேமிப்பு வங்கி திருநெல்வேலிக் கிளை முகாமையாளர் இ.ராஜாமகேந்திரசிங்கம் கொழும்பு தலைமை அலுவலகத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.இவர் இப்பயிற்சியில் கலந்துகொள்ள சிங்கப்பூர் பயணமாகியுள்ளார்.



ராஜாமகேந்திரசிங்கம் லண்டன் கணக்கியல் நிபுணத்துவ நிறுவனத்தின பட்டதாரியும், லண்டன் பட்டய வங்கியாளர் நிறுவனத்தின் இறுதிப்பரீட்சை பகுதி I ஐ திறமையாக நிறைவு செய்தவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. அத்துடன், யாழ்.பல்கலைக்கழக புறநிலை அலகில் அலுவலக முகாமைத்துவ விரிவுரைகளை நிகழ்த்தியவரும் ஆவார்.

இவர் திருநெல்வேலி இராமகிருஸ்ணாலயத்தின் இயக்குனரும் ஆவார்.

(3)

★ ★ ★



தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 10இல் கல்வி கற்கும் செல்வி ராஜினி சோதிலிங்கம் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சமித்தியினால் தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 150ஆவது பிறந்ததின விழாவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் மத்திய பிரிவில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளா.

★ ★ ★



வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.மயிலேறும் பெருமாள் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

மாத்தறை அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக சேவையை ஆரம்பித்த இவர் பல்வேறிடங்களில் பணியாற்றியபின்னர் மன்னார், பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலைகளில் மாவட்ட வைத்தியப் பொறுப்பதிகாரியாக பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். தற்போது வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றும் இவர் வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவார்.

(3-173-15)

# பனம் கடகம் இழைக்கும்...

(7ஆம் பக்க தொடர்ச்சி)

பனை ஓலையில் இருந்து ஈக்கிலை அகற்றுதல் வாரிடை என்கின்றனர்.

பின்னர் வாரிடை செய்யப்பட்ட ஓலைகளை கடகம் இழைப்பதற்குத் தகுந்த அளவுகளில் வாருதல் வேண்டும். நாரை மடித்து அரை இஞ்சி மற்றும் முக்கால் இஞ்சி அளவுகளில் சட்டம் சட்டமாக ஓலைகளை சம இதழ்களாக வாருகின்றோம் (இதனை அடவியின் என்கின்றனர்).

'அதேபோன்று பனம் மட்டையையும் பச்சை மட்டையாயின் வெயிலில் உலரவிட்டு எடுப்போம். பின்னர் மட்டையின் உள்ளே உள்ள சோத்தியை அகற்றி நாரைப் பிரித்தெடுத்துக் கொள்வோம். (இதனைக் கறுவுதல் என்கின்றனர்). இவ்வாறு கறுவுதல் செய்வதற்குப் பனம் மட்டை ஒன்றிற்கு ஒரு ரூபா ஐம்பது சதம் கூலியாகக் கொடுககிறோம்.

"பின்னர் கறுவப்பட்ட நார்களை பனை ஓலை இதழுக்கு சமனாக அரை இஞ்சி மற்றும் முககால் இஞ்சி அளவுகளில் சட்டம் சட்டமாக வாரி வைத்துக்கொள்ளவேண்டும்.

"காய்ந்த பனம் மட்டையாயின் அதனைக் கறுவுதல் செய்வதற்கு வசதியாக கடலநீரில் ஒரு நாள் ஊறவிட்டு எடுத்துக்கொள்வோம். அதன் பின்பு வெயிலில் பதப்படுத்தி மேற்சொன்னவாறு கறுவுதல் செய்துகொள்வோம்.

"ஒரு கடகம் இழைப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட தேவைப்பாடுகள் அனைத்தும் நிறைவுசெய்துவைத்துக்கொள்தல் அவசியம்" என்றார் நகுலேஸ்வரன்.

ஒரு கடகம் இழைப்பதற்கு எத்தனை உள்ளோலைகள், மட்டைகள் தேவைப்படுகின்றன என்று கேட்டதற்கு -

ஒரு கடகம் இழைப்பதாயின் சராசரியாக 10 மட்டையும், ஒரு ஓலையும் எமக்கு தேவைப்படுகிறது. அதேவேளை நாளொன்றுக்கு ஆகக் கூடுதலாக நான்கு கடகங்கள் எம்மால் இழைக்கக கூடியதாக உள்ளது.

சிறிய கடகம் என்ன விலைக்கும் பெரிய கடகம் என்ன விலைக்கும் விற்கிறீர்கள் என வினா எழுப்பியபோது -

விற்பது என்று சொல்வதைவிட இங்குவரும் வியாபாரிகள் சிறிய கடகத்திற்கு 110 ரூபாவும் பெரிய கடகத்திற்கு 200 ரூபாவும் தருகிறார்கள் - என்றார்.


**அமெரிக்காவில் குடியேற**

**அரியதோர் வாய்ப்பு**

Green Card Visa விண்ணப்பப் படிவங்களை உடனுக்குடன் விரைவாக அனுப்புவதற்கும் ஆலோசனைகட்கும் விசிற்றோக். நெற், 1 ஆம் மாடி, வீரகத்திப் பிள்ளையார் ஆலயமுன் பரமேஸ்வராச்சந்தி, பலாலி வீதி, திருநெல்வேல'.

(38780)(32-38-17-15) T.P -021 222 6637


## மாவீரர் தினத்தை முன்னிட்டு நாளை நாடகப்போட்டி

யாழ்ப்பாணம்,நவ.20

எதிர்வரும் மாவீரர்தினத்தை முன்னிட்டு இணுவில் கலாஜோதி சனசமூக நிலையம் நடத்தும் நாடகப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பித்தவர்கள் உரிய ஏற்பாடுகளுடன் குறித்த நேரத்துக்குச் சமூக மளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (4)

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## ஆதனவரி அறிவித்தல் - 2005

மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் யாழ்ப்பாணம் மாநகரசபை பின்வருமாறு முடிவுசெய்துள்ளமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. அடுத்துத் திருத்தியபடியான முற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் நியதிப்படி 2004 ஆம் ஆண்டுக்கான பெறுமான மதிப்பீட்டை அல்லது ஆதனவரி மதிப்பீட்டை குறிப்பிட்ட விடயங்களில் அவசியமெனக் கருதப்படக் கூடியதாக அத்தகைய திருத்தங்களுடன் 2005 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாக அல்லது ஆதனவரி மதிப்பீடாக ஏற்றுக்கொள்ளுதல்.

2. அடுத்து திருத்தியபடியான முற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் நியதிப்படி யாழ்ப்பாணம் மாநகர சபைப் பரிபாலன எல்லைக்குட்படும் சகல வீடுகள், ஒவ்வொரு விவரணத்தையும் கொண்ட கட்டடங்கள், சகல காணிகள், குடிமனைகள் எதனதும் வருடாந்தப் பெறுமதியின் மீது 2005 ஆம் ஆண்டிறகுப் பின்வரும் வீதங்களை உண்டுபண்ணவும் விதிக்கவும்.

அ. 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம், 6 ஆம், 7 ஆம், 8ஆம, 9 ஆம், 10 ஆம், 11 ஆம், 12 ஆம், 13 ஆம், 14 ஆம், 15 ஆம், 16 ஆம், 17 ஆம், 18 ஆம், 22 ஆம், 23 ஆம் வட்டாரங்களில் 12 சதவீதத்திற்கான (பன்னிரண்டு சதவீதம்) ஒரு விகிதம்.

ஆ. 19 ஆம், 20 ஆம், 21 ஆம் வட்டாரங்களில் 18 சதவீதத்திற்கான (பதினெட்டு சதவீதம்) ஒரு விகிதம்.

இ. நீர்ச்சேவையால் பயனடையும் ஆதனங்களுக்கு பந்தி 2. அ, ஆ இல் சொல்லப்பட்ட வீதவரிகளுக்கு மேலதிகமாக 2 சதவீதத்திற்கான (இரண்டு சதவீதம்) ஒரு விகிதம்.

3\. அ. மேற்குறிப்பிட்ட வீத வரிப்பணங்கள் யாவையும் நான்கு சம கந்தாய தவணைகளில் 2005 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, யூன் 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

ஆ. 2005 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த வீதவரி முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு 10% (பத்து சதவீதம்) கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன், வீதவரி வருமதியாகவுள்ள அந்தக் கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய வரி செலுத்தப்பட்டால் ஒரு 5 % (ஐந்து சதவீதம்) கழிவும் அனுமதிக்கப்படும்.

4\. மேற்கூறப்பட்ட பந்தி 3. அ. இல் சொல்லப்பட்ட காலங்களில் குறித்த வீத வரிகளைச் செலுத்தாதவிடத்து வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15 % (பதினைந்து சதவீதம்) இலும் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20 % (இருபது சதவீதம்) இலுமான விறாந்துச் செலவு அறவிடப்படும்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2004.11.18 (C.39178)(38-15-17)

கலாநிதி.க.குணராசா,
யாழ்.மாநகர ஆணையாளர்.

## மீள்கேள்வி கோரல் - 2005
### நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் மரக்கறிச்சந்தை, மீன் சந்தை, சைக்கிள் பாதுகாப்பு நிலையம் (தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம்) ஆகியன சார்பில் மீளவும் கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கேள்விப்படிவம் வழங்கல் | : 22.11.2004 தொடக்கம் |
| கேள்விப்படிவம் ஏற்றல் | : 29.11.2004 மு.ப.10.00மணி வரையும். |
| கேள்விகள் திறத்தல் | : 29.11.2004 நண்பகல் 12.00 மணி. |

இவ்விடயமாக மேலதிக விவரங்களை 04.11.2004 ஆம் திகதிய உதயன் பத்திரிகை மூலமாகவும், நகராட்சி மன்ற அலுவலகத்தில் நேரடியாகவும் அறிந்துகொள்ளலாம்.

செ.திருஞானசம்பந்தர்,
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.
18.11.2004 (C/39188)(42-38-17-15)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கும் கலை நிகழ்வும்

யாழ்ப்பாணம்,நவ.20

யாழ்.கல்வி வலய முன்பள்ளிகளின் மாணவர்களின் பெற்றோருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் கலைநிகழ்வுகளும் கடந்த புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி லோ.யோகராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன, யாழ்பிரதேச செயலர் பா.செந்திநந்தன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். தங்கராஜா, முன்பள்ளி முதல்வர் திருமதி.எல்.மகேஸ்வரன், உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பு.பாலசுப்பிரமணியம், குருநகர் கிராம அலுவலர் எஸ்.ஞானசேகரம் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டனர். (8-203)

## வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்
## மணல் விநியோக அறிவித்தல்

**21.11.2004ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 4.11.2004ஆம் திகதி குறிப்பிட்டவர்களுக்கான மணல் விநியோகம் நடைபெறும். 5.11, 6.11 ஆகிய திகதி குறிப்பிட்டவர்களுக்குரிய மணல் விநியோகத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

உபயகதிர்காமம்,
புலோலி. (C/39186)(33-38-17-15) - நிர்வாகம்.

## வட்டுக்கோட்டையில் கிராமிய வங்கிக் கிளை

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வட்டுக்கோட்டையில் கிராமிய வங்கிக் கிளை ஒன்றை அடுத்த மாதம் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது.

அராலி, - சங்கரத்தை, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளிலுள்ள சங்க உறுப்பினர்களின் நலன் கருதி இந்த கிராமிய வங்கிக் கிளை திறக்கப்படவுள்ளது என சங்கத்தின் தலைவர் ம.சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.(3-135)

## மரண அறிவித்தல்

### குலத்துரை குலராஜசேகரம்

**(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், உரும்பிராய் இந்துக்கல்லூரி)**



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குலத்துரை குலராஜசேகரம் அவர்கள் 15.11.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குலத்துரை - நாகம்மாவின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் நவசீலன், சற்குணசீலன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அகிலாவின் அன்பு மாமனாரும் அபிராமியின் அன்புப் பேரனும் குலவீரசிங்கம் (அமரர்), குலவதி, குலராசவதி (அமரர்), குலவீரவதி, குலரத்தினவதி (அமரர்) குலராசவீரரத்தினவதி, குலவீரசேகரம், குலத்துங்கசேகரம், குலரத்தினசேகரம், குலஞானவதி, குலரஞ்சிதவதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தர்மராசா, பத்மநாதன் (அல்ரா கொமினிகேசன், திருநெல்வேலி), சாரதாதேவி (அமரர்), சகுந்தலாதேவி (அபிராமி - முன்பள்ளி முன்னாள் ஆசிரியை), உமாவதி (கொழும்பு), சுப்பிரமணியம், இரத்தினம், சீவரத்தினம், சண்முகநாதன், இராமச்சந்திரன், இந்திராணி, நாகபூசணி, றதி, நகுலேஸ்வரன், லோகேந்திரகுமார் (கனடா), சறோஜினிதேவி, சம்பூரணி, சிதம்பரநாதன் (அமரர் - கொத்தலாவலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, திருநெல்வேலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சைவப் பாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு.
T.P. 0777 279722 (38784)(38-17-15)

தகவல்
மனைவி,
பிள்ளைகள்.

## தென்மராட்சி ஆசிரியர்களுக்கு தொழில்நுட்ப பாட செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடககம் தரம் 9 வரையான வகுப்புகளில், செயன்முறைத் திறன்களும், தொழில் நுட்பத் திறன்களும், பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயலமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

குறிப்பிட்ட பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களை இச் செயலமர்வில் கலநது கொள்ளுமாறும், செயலமர்வில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்குக் கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (3-117)


**S.M.S. Engineers**

# Engineers & Constructors

வன்னியில் நீண்ட காலமாக பாரிய நிர்மாண வேலைகளை செயற்படுத்தும் மேற்படி நிறுவனம் யாழ்ப்பாணத்திலும் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளது. 2005இல் தமது செயற்பாட்டை திறம்பட செயற்படுத்த கீழ் விவரமிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

வெற்றிட விவரம்

**1. Engineer**

**Qualification:-**

I. B.Sc. Eng.Civil with 2 years experience
II. IESL or CEI (London) or Equivalent with 2 years experience
III. NDT or Equivalent with 5 years experience

**2. Architect**

**Qualification:-**

B.Sc.(Architect) or Equivalent

**3. Accountant**

**Qualification:-**

ACA or CIMA Qualified or Equivalent with 2 years experience

**4. Administrative Officer**

**Qualification:-**

Any Graduate or Equivalent with 3 years managerial experience

**5. Senior Technical Officer**

**Qualification:-**

NDT/HND Civil or Equivalent with 3 years experience or NCT or Equivalent with 10 years experience

**6. Quantity Surveyors**

**Qualification:-**

Degree in Qs or Equivalent with 2 years experience or NCT (Quantity Surveying) with 8 years experience

**7. Technical Officers**

**Qualification:-**

NCT with 5 years experience

**8. Work Supervisors**

**Qualification:-**

NCT or Equivalent with 5 years experience

**9. Account Assistants**

**Qualification:-**

HNDA or Equivalent with 2 years experience or NCAT or Equivalent with 4 years experience or A/L with 7 years experience

**10. Carpenters**

ஐந்து ஆண்டுக்கு மேல் முன்அனுபவம் விரும்பத்தக்கது

**11. Masons**

ஐந்து ஆண்டுக்கு மேல் முன்அனுபவம் விரும்பத்தக்கது

**12. குடிசார்துறை சார்ந்த தொழிலாளர்களும் விண்ணப்பிக்கலாம்.**

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 10.12.2004 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

**S.M.S.ENGINEERS,**
**234, Main Street, Jaffna.**
**T.P.: 021 222 3381.**

(38783)

## மழையினால் வீதிகள் சேதம்

ஒட்டுசுட்டான்,நவ.20

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் முத்தை ஜயன்கட்டு 4 ஆம் கண்டம், பண்டாரவன்னி கிராமத்திற்கு சென்றடையும் வீதிகள் பாரிய சேதமடைந்துள்ளன.

இதனால் அவ்வீதிகளினால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. அத்துடன், குறுகிய பாதைகளும் நீரினால் மூடப்பட்டுள்ளமையினால் மக்கள் போக்குவரத்து செய்யமுடியாது பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். (8-203-341)

## ஒட்டுசுட்டான் எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு

ஒட்டுசுட்டான்,நவ.20

ஒட்டுசுட்டான் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு கடந்த வாரம் கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் இலக்கியன் ஏற்றி வைக்க தமிழீழத் தேசியக் கொடியை ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கதிர் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து ஒட்டுசுட்டான் மாங்குளக் கோட்டப் பொறுப்பாளர் ஈழவன், முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். (8-204-341)

# கிளிநொச்சியில் மாவீரர் தினத்தை எழுச்சியுடன் கொண்டாட ஏற்பாடு

கிளிநொச்சி,நவ.20

மாவீரர் நாளை மிகவும் உணர்வெழுச்சியுடன் கொண்டாடுவதற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னேற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

நாளை ஆரம்பிக்கவுள்ள மாவீரர் நாளில் மாவீரின் பெற்றோர்களைக் கௌரவித்தல், நினைவுக் கொட்டகைகள் அமைத்தல், பதாதைகள் மற்றும் வளைவுகள் அமைத்தல் ஆகிய முன்னேற்பாடுகளை கிளிநொச்சி மாவட்டப் பொது அமைப்புக்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவுத்திணைக்களங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியன மேற்கொண்டுள்ளன.

இந்த முன்னேற்பாடுகளுக்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் அதன் பொறுப்பாளர் காண்டீபன தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கேணல் தீபன், தமிழீழப்பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை -

இவ்வாறான கலந்துரையாடல்கள் விசுவமடு, பளை, முழங்காவில், அக்கராயன், வட்டக்கச்சிப் பகுதிகளிலும் நடைபெற்றுள்ளன. (8-13)



யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழக உறுப்பினர்கள், சர்வதேச மாணவர் பேரவையின் அனுசரணையுடன் கிளிநொச்சி 'செஞ்சோலை', கைவேலி 'காந்தருபன் அறிவுச்சோலை' ஆகிய சிறுவர் இல்லங்களுக்குச் சென்று 3 நாள் கல்விப் போதனைகளை நடத்தி அச்சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களை அன்பளிப்புச் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# கிணறுகளுக்கு குளோரின் இடுமாறு சுகாதாரப் பகுதியினரிடம் கோரிக்கை

ஒட்டுசுட்டான்,நவ.20

தற்போது பெய்துவரும் மழைகாரணமாக கிணற்று நீரில் கிருமிகள் பரவியிருக்கக்கூடும் என்பதால் கிணறுகளுக்கு குளோரின் இடவேண்டும் என ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள், சுகாதாரப் பகுதியினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிணற்றைச் சுற்றிக் கட்டுகள் கட்டப்படாத பாதுகாப்பற்ற கிணறுகளை வெள்ளம் மேவிப் பாய்ந்ததினால் அக்கிணறுகளில் நீர்க் கிருமிகள் தோன்றியிருக்கலாம். அதனால் தொற்று நோய்கள் பரவக்கூடிய நிலை தென்படுவதாகவும் கிணறுகளுக்கு குளோரின் இட்டு சுகாதாரத்தைப் பேண ஆவன செய்யவேண்டுமெனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்நிலையில், தற்போது இப்பிரதேசத்தில் காய்ச்சலால் பீடிக்கப்படுவோரின் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்துடன், சிலர் மலேரியாவினாலும் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்தமாதம் வைரஸ் காய்ச்சலினால் பாதிகக்கப்பட்ட 455 பேர் கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (8-203-341)

## கமக்கார அமைப்புகளுக்கான கலந்துரையாடல்

ஒட்டுசுட்டான்,நவ.20

ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களுக்கான கலந்துரையாடல் கடந்த 15 ஆம் திகதி முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுப் நிறுவனத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் தயா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் கோட்டப் பொறுப்பாளர் ஈழவன் கருத்துரையாற்றினார்.

தொடர்ந்து தற்போது பெய்து வரும் மழையினால் உடைப்பெடுக்கும் நிலையில் உள்ள சிறு குளங்களைப் பாதுகாப்பது தொடர்பாக ஆராயப்பட்டு அதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

தொடர் மழையினால் அழிவுக்குட்பட்ட பயிர்ச் செய்கை பற்றிய விபரங்கள் திரட்டுவது தொடர்பாகவும் இதில் ஆராயப்பட்டது. இந்நிகழ்வில் அனைத்துத்துறை சார்ந்தோரும் கலந்துகொண்டனர். (8-203-341)

# புதுக்குடியிருப்புச் சந்தையில் மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

புதுக்குடியிருப்பு,நவ.20

புதுக்குடியிருப்புச் சந்தையில் மரக்கறிகளின் விலை நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது.

விரதங்கள் அனுஷ்டிக்கப்பட்டுவரும் இந்நாள்களிலே மரக்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

போஞ்சி, பயிற்றங்காய், பீஸ்தா பயிற்றை என்பன ஒரு கிலோ 120 ரூபாவாகவும் கரட், கோவா, வெண்டி, உருளைக்கிழங்கு போன்றன ஒரு கிலோ 100 ரூபாவாகவும் லீக்ஸ் கிலோ 90 ரூபாவாகவும், பச்சை மிளகாய் கிலோ 200 ரூபாவாகவும், பீற்ரூட், புடோல், தக்காளி போன்றன கிலோ 80 ரூபாவாகவும், வெங்காயம் கிலோ 60 ரூபாவாகவும் கருணைக் கிழங்கு, மோதகவள்ளிக்கிழங்கு என்பன கிலோ 45 ரூபாவாகவும் மரவள்ளி கிலோ 30 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன், பழவகைகளும் விலையேற்றம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில் பெய்துவரும் மழையே இவ் விலையேற்றத்துக்குக் காரணம் எனவும் இது வழமையை விட பலமடங்காக அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (8-203-353)




## ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

வட்டக்கச்சி,நவ.20

கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கும், தொண்டர் ஆசிரியர்களுக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் குறிப்பிட்ட சகல ஆசிரியர்களும் தமது ஜி.சீ.ஈ. சாதாரணதர, உயர்தர சான்றிதழ்களுடன் தவறாது சமுகம் தருமாறு கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கேட்டுள்ளார். (8-405-202)

# பாரதிபுரத்தில் புனரமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம் கையளிப்பு

கிளிநொச்சி,நவ.20

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 'நிக்கொட்' கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சமூக அபிவிருத்தித்திட்டத்தில் பாரதிபுரத்தில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம், பாலம், மதகுகள் மற்றும் கிராமிய வீதிகள என்பவற்றைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 15ஆம் திகதி இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக 'நிக்கொட்' பகுதி இணைப்பாளர் க.ரவிக்காந் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை சமூக பொருளாதார அபிவிருத்திக்குழுத் தலைவர் பொ.இராமலிங்கம் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினைக் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றிவைத்தார்.

நிகழ்வில் பொதுநோக்கு மண்டபத்தினைத் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜியும், சமூக பொருளாதார அபிவிருத்திச் செயலகத்தினை 'நிக்கொட்' திட்டப் பிரதிப்பணிப்பாளரும், கிராம சேவையாளர் அலுவலகத்தினை தமிழர் புனர்வாழ்வுக்கழக 'நிக்கொட்' திட்டப் பணிப்பாளர் சி.சுடரும் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும், உரைகளும் இடம்பெற்றன. தொடர்ந்து இடம்பெற்ற கையளிப்பு நிகழ்வில் பொது மண்டபத்துக்கான சான்றிதழை தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் வ.றீகனும், புனரமைக்கப்பட்ட வீதிகளுக்குரிய சான்றிதழை 'நிக்கொட்' திட்டப் பொறியியலாளரும், பாலம், மதகுகளுக்குரிய சான்றிதழை தமிழர் புனர்வாழ்வுக் கழக 'நிக்கொட்' திட்டப் பணிப்பாளர் ஆகியோர் பாரதிபுரம் கிராம சேவையாளரிடம் கையளித்தனர். (8-202)

முரசுமோட்டை சேற்றுக்கண்டி

## அம்மன் கோவில் குளம் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

பரந்தன்,நவ.20

கண்டாவளைப் பிரதேசத்தின் முரசுமோட்டைக் கிராமத்திலுள்ள சேற்றுக்கண்டி அம்மன் கோவில் குளம் புனரமைப்புக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கண்டாவளைப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வேலைத் திட்டத்தினால் இப்பகுதியில் குடியிருப்பவர்கள் பெரும் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. கோடைகாலத்தில் ஏற்படும் வரட்சிக்கு இவ்வேலைத்திட்டம் பெரிதும் உதவும் என்றும் இப்பகுதி மக்களும் பொது அமைப்புக்களும் இவ் வேலைத் திட்டத்தினை வரவேற்றுள்ளனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-203-35)

SHARP
be sharp
கொண்டாட்டம்... கொண்டாட்டம்...
பிறவுண்ஸ் வழங்கும் நம்பமுடியாத கொடுப்பனவுகள் விரையுங்கள்...
ஜப்பானியத் தொழில்நுட்பத்துடன் கூடிய Sharp T.V.5 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குப் பிந்திய சேவையில்...



14D25 ~~20295~~/= 16775 /=
20D25 ~~30525~~/= 25000/=
21EFGIA ~~38995~~/= 32956 /=
இன்னும் பல கொடுப்பனவுகள்.....
BROWNS GROUP BG ESTD 1875
பிறவுண்ஸ்
இல.89, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-222 5150.

# முல்லைத்தீவு தபாலகத்துக்கு தாமதமாகவரும் தபால்பொதிகள்

ஒட்டுசுட்டான்,நவ.20

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வரும் தபாற்பொதிகள் அண்மைக்காலமாகத் தாமதமாகவே மாவட்டத் தபாலகத்திற்கு வந்தடைவதாகவும், அத்துடன், முத்திரைகளுக்கும் தட்டுப்பாடு நிலவிவருவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட பிரதித் தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தபாற்பொதிகளை ஏற்றிவரும் வாகனம் பழுதடைந்துள்ளமையால் எமது தபாலகத்திற்கு வரும் பொதிகள் காலம் தாழ்த்தியே வந்தடைகின்றன. அவ்வாறு வரும் பொதிகளினை உடனே உரிய பகுதிகளுக்கு அனுப்பமுடியாமல் அவை தேங்கியுள்ளன.

அத்துடன், 20 ரூபா, 5 ரூபா போன்ற முத்திரைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனைத் தபால் அத்தியட்சகருக்கு தெரியப்படுத்தியும் எதுவிதப் பயனும் இல்லை. இதனால், ஏனைய முத்திரைகளையும் வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (8-203-341)




## ஏ-9 வீதியில் சிரமதானம்

மாவீரர் வாரத்தை யொட்டி தென்மராட்சி கல்வி வலய மாண வர்கள் ஏ-9 வீதியி ணைச் சிரமதானம் மூலம் துப்பரவு செய்து வரு கின்றனர்.

எழுதுமட்டுவாழ் ஆசைப்பிள்ளை ஏற்ற த்தடியிலிருந்து நாவற் குழி பாலம் வரையில் வீதியின் இரு மருங் கும் துப்பரவு செய்யப் படுகின்றது. (8-117)


## புற்று நோயாளருக்கான இலவச வைத்திய முகாம்

சம்பந்தர் மொடேர்ண் வைத்திய நிலைய ஆதரவில் புற்றுநோய் வைத்திய முகாம் நடைபெறும். Dr. வாணிப்பிள்ளை (புற்றுநோய் வைத்திய நிபுணர் - கொழும்பு) 24.11.2004 புதன்கிழமை காலை 9மணி. சம்பந்தர் மொடேர்ண் வைத்தியசாலையில் இலவச பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளவும்.

**சம்பந்தர் மொடேர்ண் வைத்திய நிலையம்**
08, இராமையாச் செட்டியார் வீதி,
(அமுல் கிறீம் கவுஸ் அருகே)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(38789) (15-17-33-32) T.P: 222 7259


## அன்னையின் மலரடிக்கு 35 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
**11.11.1921**
விண்ணில்
**17.10.2004**

திருமதி
**மேரியோசேப்பின் பேரின்பரெட்ணம்**
(இளைப்பாறிய ஆசிரியை)

'உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும் வாழ்வான்'

பாசத்தின் பிறப்பிடமே அம்மா!
பாரினிலே எம்மைப் பரிதவிக்க விட்டீரே!
பார்க்க விழி ஏங்குதம்மா
எங்கு சென்றீர் எம்மைவிட்டு?

இவரின் பிரிவால் துயருறும்:
அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர் சகோதரி, பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள் , மைத்துனர்,
மைத்துனி, உற்றார், உறவினர்.

89/2, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை.

(38788) (15-17-33-32)

## எயிட்ஸ் விழிப்புணர்வு பிரசாரம்

வரணி,நவ.20

எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்பு ணர்வுப் பிரசாரம் ஒன்று கடந்த 14 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை சாவ கச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத் தில் இடம்பெற் றது.

சமூக நிறுவ னங்களின் பிரதிநி திகள் பலர் இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட னர்.

அபிவிருத்திக் கான சமூக நிறு வனங்களின் வலை யமைப்பு, (Sond) அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத் தின் அனுசரணை யுடன் இப்பிரசாரம் நடைபெற்றது. (8-170)


Jayoda **ஜயோதா** ජයෝද

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

டிக்கட் தொடர் இல. 7488425 முதல் 7500674 வரை
சீட்டிழுப்பு இல. 86 திகதி 18-11-2004

வெற்றி எண்கள் **4 5 2 2 3 1** சுப்பர் எண் **18**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,18,34,450/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,18,34,450/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 109 | 5,000/- | 5,45,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,083 | 500/- | 5,41,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,825 | 50/- | 5,41,250/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,07,287 | 10/- | 10,72,870/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 110 | 1,000/- | 1,10,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,084 | 100/- | 1,08,400/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,729 | 20/- | 2,14,580/- |
| மொத்தம் | 1,31,256 | | 53,31,200 /- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 53,31,200/-

இந்த திங்கட்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,21,35,475/-**

தொடர் இல. 6534705 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 நொவம்பர் 22 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7495884-1-13
7495855-8-73
7488691-5-25
7491288-7-00
7490220-0-23
7495877-4-77
7495959-83-9
7493000-2-23


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



எங்கள் குடும்ப விளக்கு
அமரர் **சிற்றம்பலம் சுந்தரலிங்கம்**
**திதி: 20.11.2004**

ஆண்டொன்று ஆனதப்பா
ஆறவில்லை எம்துயரம்
உங்கள் நிழலில் வாழ்ந்த
வாழ்வுபோல் இனிவருமா?
ஆறுதலுக்கு ஆயிரம் உறவு இருந்தென்ன
அப்பா என்றழைக்க யாரும் இல்லை
தந்தைக்கு என் செய்வோம்
தனிமைக்குத் துணையறியோம்
தயங்கும் இதயத்திற்கேது செய்வோம்
தாயும் நாங்களும் கண்ணீர் சொரிகின்றோம்
உங்கை நியதி இது என்றாலும் பிரிவு
தாங்க முடியவில்லையே அப்பா
உங்கள் ஆத்ம சாந்திக்காக அரசடி
சித்தி விநாயகரை வேண்டுகின்றோம்.

இருபாலை.
(38733)(34-15-17-33-)

\- குடும்பத்தினர்.


## இன்று முதல் நீங்கள்....,



குறைந்த செலவில் அதிக பலன்களை அனுபவிக்க,
நவீனரக இயந்திரங்களுடன் கூடிய முழுமையான
வெதுப்பகம் ஒன்றின் உரிமையாளர் ஆகுங்கள்.

வெதுப்பக உரிமையாளர்கள், சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள்,
இனிப்புப்பண்ட உற்பத்தியாளர்கள், கேடரிங் மற்றும் வெதுப்பகம்
ஒன்றினை ஆரம்பிக்க இருக்கும் உங்கள் அனைவருக்கும்
தேவையான அனைத்து ரக இயந்திரங்களுக்கும்.....



**25** வருட உன்னத சேவை எங்களிடம்

இப்பொழுது....,
கொழும்பு வராமல் தெரிவு செய்யும் ஒவ்வொரு இயந்திரத்தையும், உங்கள் கூடத்திற்கே மிகவும் நம்பிக்கையுடன் கொண்டு வந்து சேர்ப்போம். உங்கள் இயந்திரம் கைக்கெட்டியவுடன் பணம் செலுத்தினால் போதுமானது.



- குறைந்த விலையில், தொடர்பு கொண்ட அடுத்த கனமே இயந்திரங்களை நாடு முழுவதும் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி.
- கையிலுள்ள பணத்திக்கேற்ப இலகு தவணை கொடுப்பனவு முறை.
- பல்வேறு வடிவங்களில் கிடைக்கும்.
- இரண்டு வருட உத்தரவாதம்.
- விற்பனையின் பின்னதான உன்னத சேவை.
- நாடு முழுவதுக்குமான போக்குவரத்து சேவை இலவசம்.
- எல். பி. கேஸ் மற்றும் சிங்கல் பேஸ் மின்சாரத்தில் இயங்கும் தன்மை.
- தட்டுகள், பன்ஜ், ஸ்பன்ஜ் தட்டு, ரெக், ஸ்டேன்ட் போன்றவை இலவசம்.



**NEW RANJITH INDUSTRIES**
385/1, NEW KANDY ROAD, MALABE.
Tel : 4406865, 4408640, Fax : 4406865
BRANCH : 1424, KOTTE ROAD, RAJAGIRIYA.
TEL : 2865103, 4405599 FAX : 4405599

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 04 – 03 – 1923

உதிர்வு 24 – 11 – 2001

## திருமதி
## வைரமுத்து சின்னத்தங்கம்

ஆண்டுகள் மூன்று கடந்து போனாலும்
ஆறாது உமது பிரிவுத் துன்பம் - தாயே!
எந்நாளும் உங்கள் நினைவுடனேயே நாங்கள்
இப்பூவுலகில் வாழ்கின்றோம். உங்கள் ஆத்மா
சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"கனேசபதி"
கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (சி-39194)(43-11-16-45)

தகவல்:
சிவகணேசதாசன்,
சர்மிளா ரேடர்ஸ்,
பலாலி றோட், உரும்பிராய்.

# கண்ணீர் அஞ்சலி



யா/புனித ஜோண் பொஸ்கோவின் முன்னாள் உப அதிபரும், எமது பிள்ளைகளின் ஆசிரியையுமாகிய திருமதி மில்றெட் அன்ரோனியா ஆரோக்கியநாதர் அவர்களது அன்புக் கணவரும், எமது குடும்ப நண்பரும், எமது பிள்ளைகளின் விசேட வகுபபு ஆசிரியரும், சிசிலியன் இன்ஸ்ரிரியூட்டின் நிர்வாக இயக்குநருமாகிய

## பிரான்சிஸ் மதியாபரணம் ஆரோக்கியநாதர்

அவர்களின் திடீர் மறைவினால் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

க.அரியநாயகம் குடும்பத்தினர்,
க.தேவராஜா குடும்பத்தினர்,
(சி-39194)(43-11-16-45) ச.திருச்செல்வராஜன் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை பிரான்சிஸ் மதியாபரணம் ஆரோக்கியநாதர்
### (சிசிலியன் கல்வி நிறுவன இயக்குநர்)



யாழ்ப்பாணம், 32/5, அச்சக வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சி.பி.ம. ஆரோக்கியநாதர் அவர்கள் 19.11.2004 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை பிரான்சிஸ் - மரியம்மா மரியாச்சி ஆகியோரின் அன்பு மகனும் மில்றெட் அன்ரோனியா (ஓய்வுபெற்ற ஆசிரியை சென்.ஜோண்பொஸ்கோ) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருட்சகோதரி சிசிலியா மேரியின் (அ.கா) அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சில்வன் சஜீவன் மற்றும் நிகாள் நிறோஜினி (யாழ்பல்கலைக் கழகம்), தீபன் திலீஷன் (இமேஜ் ஆட்ஸ் சென்ரர் உரிமையாளர், கோண்டாவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இராஜசேகரனின் (நிஷாநந்தா நகை மாளிகை) அன்பு மாமனாரும் கனிந்ரனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.11.2004 திங்கட்கிழமை 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் திருப்பலிக்காக புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32/5, அச்சகவீதி,
யாழ்ப்பாணம்.
(சி-39194)(43-11-16-45)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளை.

## திருமதி ஈஸ்வரி தர்மலிங்கம்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஈஸ்வரி தர்மலிங்கம் 16.11.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை (கிளாக்கர்) - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற மூத்ததம்பி - சிவகங்கை தம்பதிகளின் மருமகளும் தர்மலிங்கத்தின் (கனடா) பாசமிகு மனைவியும் விமலராசன் (கனடா) மாமியும் அனுஷியா (கனடா), அரவிந்தன் (டென்மார்க்), அமலன், அனிந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காசினி, சியானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான விவேகானந்தன் அருளானந்தன் மற்றும் சிவானந்தன், காலஞ்சென்ற காசிநாதன் மற்றும் சர்வானந்தன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நாகேஸ்வரி, சுனிதை, ஸ்ரீரஞ்சினி, கெங்கா ஆகியோரின் மைத்துனியும் Dr.சாந்தினி (லண்டன்), கிரன், (பிரான்ஸ்), கெங்கா (கொழும்பு), ரூபினி (தென்ஆபிரிக்கா), ஹரிராம் (லண்டன்), மனோவதினி (அவுஸ்திரேலியா), கோகுலகாந் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), டினேஸ் (லண்டன்), அப்பயா, வனுயா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் நடராசா, காலஞ்சென்ற சண்முகலிங்கம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மலேசியா), புவனேஸ்வரி, காலஞ்சென்ற நல்லலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74, பலாலி வீதி
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

T.P.:021-4590720 (சி-39194)(32-43-11-16)

தகவல்:
ச.சிவானந்தன்,
ச.சர்வானந்தன்
(தம்பிமார்).


விசேட விலைக் கழிவில்

அழைப்பிதழ்கள், வாழ்த்து அட்டைகள், CD மற்றும் கசட் கவர்கள் Visiting Card மற்றும் வியாபார நோக்கில் டிசைனிங் செய்து பெருமளவு பிரதியாக்கம் செய்வோருக்கும், உடனுக்குடன் விசேட விலைக்கழிவில் பிரதியாக்கம் செய்துகொடுக்கப்படும்.

மூர்த்தி லேசர் டிஜிற்றல்
கலர் லாப்,
(39197) யாழ்.வீதி, மானிப்பாய்.

லக்ஸ்மி சினிமா இணுவில்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
சிம்பு (இருவேடம்), ஜோதிகா, கவுண்டமணி நடிப்பில்

மன்மதன்



தினசரி: 11.00, 3.00, 7.00, 10.00 புதிய நேரம்
பதிவு ஆசனம்: 0776592008 (38480)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

குளிரூட்டப்பட்டது 2 ஆவது வெற்றிவாரம் காட்சி நேரம்:
தனுஷ், பிரியா நடித்த 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே.)



ட்ரீம்ஸ் (ரீல்ஸ)
வெகுவிரைவில் இரவு 9.00 (பு.நே) காட்சியாக RAMBO-3

நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்
அஜித், சிநேகா நடித்த

ஜனா (ரீல்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) RAMBO - 3

ராஜா யாழ்ப்பாணம்

அஜித் + அஜித், பூஜா நடித்த

அட்டகாசம் (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30.
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-38750)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
சரத்குமார், நிலிதா, வடிவேல் நடித்த
டொல்பி ஒலி அமைப்புடன்

சத்ரபதி



தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)


# மரண அறிவித்தல்கள்

## கந்தர் அம்பலவாணர்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் அம்பலவாணர் அவர்கள் நேற்று (19.11.2004) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் விமலராணி (இந்தியா), புஸ்பலீலா (சுவிஸ்), புனிதவதி, லோறன்ஸ் (ஆசிரியை, யா/ஊரெழு கணேச வித்தியாசாலை), கருணாவதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மானிப்பாய் வீதி,
(விளாத்தியடி)
உரும்பிராய். (38800)(43-11-16-45)

தகவல்:
வ.லோறன்ஸ்

## திருமதி
## சுப்பிரமணியம் இராசம்மா



தவசிக்குளம், மிருசுவிலைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் இராசம்மா அவர்கள் நேற்று (19.11.2004) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் இராசரத்தினம், தங்கராசா, சிங்கராசா, காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் றங்கநாதன், இராசலிங்கம், குணரஞ்சன், நாகம்மா, இராசேஸ்வரி, மகேஸ்வரி, குணமணி ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோன்மணி, செல்வராணி, யசோதலாதேவி, கலைவாணி, அருந்தவமலர், மனோரஞ்சிதம், சுபைதா, காலஞ்சென்ற விநாசித்தம்பி மற்றும் தர்மலிங்கம், கணேஸ், கிருஷ்ணானந்தம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2004) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.2 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தவசிக்குளம்,
மிருசுவில்.
(சி-39194)(43-11-17)

தகவல்:
சிங்கராசா
(துரை - மகன்).

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## பேரின்பநாயகம் கிறிஸ்தீனாப்பிள்ளை



ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும் இல.50 கண்டி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பேரின்பநாயகம் கிறிஸ்தீனாப்பிள்ளை 18.11.2004 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி குருசுமுத்து -ஆரோக்கியம் ஆகியோரின் அனபு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி சுவாம்பிள்ளை - ஆனாசிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும் எலிசம்மா, யோசேப்பு (இளைப்பாறிய தபாலக ஊழியர் வயாவிளான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை-பேரின்பநாயகம் (அப்பச்சி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தவமணி மற்றும் நவமணி (கனடா), லலிதா, புஷ்பவதி, சாந்தகுமாரி (கனடா), சத்தியகுமாரி (கனடா), அருமைநாயகம் (கனடா) ஆகியோரின் பாசமுள்ள தாயாரும் குணறெட்ணம் (கனடா), கனகரெத்தினம் (ஜெய்ப்பூர், யாழப்பாணம்), விஜயகுமார் (முன்னாள் இறைவரி உத்தியோகத்தர்), அல்பேட் (கனடா), வித்தியானந்தன் (கனடா), கலைவாணி ஆகியோரின் பிரியமுள்ள மாமியாரும் ஜெனிற்றா (கனடா), காலஞ்சென்ற சாளினி-யுலின் (லண்டன்), நிறோஜன், நிசாந்தன், பிரகாஷ், பிரசாந்தி, அன்றியா (கனடா), அன்றூசன் (கனடா), ஏட்றியன் (கனடா), நிலான் (கனடா), டினோசன் (கனடா), களஸ்றொன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியாரும் மேவின் (கனடா) அவர்களின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.11.2004) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கரவெட்டி புனித அந்தோனியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50,கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (38790)(43-11-16-45)

தகவல்:
அ.அருமைநாயகம் (மகள்).

## திருமதி
## இராஜரட்ணம் இராஜேஸ்வரி

பருத்தித்துறை, புலோலி மேற்கு, நாவலடியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜரட்ணம் இராஜேஸ்வரி அவர்கள் நேற்றுமுன்தினம் (18.11.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜரட்ணம் (முன்னாள் பகுதி உதவி அதிகாரி, இலங்கை துறைமுக அதிகாரசபை, திருமலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மு.பொ.கந்தசாமி-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், மஞ்சுளாதேவி (மாவட்ட தொழில் அலுவலகம், திருமலை), குணசீலன் (டென்மார்க்), பிறேமசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரவிசங்கர் (ஓமான்), சிவாஜினி (டென்மார்க்), ஜெயந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் நேசமிகு மாமியாரும் ஆர்த்திகா, ராகவி, கீர்த்திகா, கௌசிகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.11.2004 திங்கட்கிழமை இல.54/10, கடல்முக வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 4.00 மணியளவில் திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54/10, கடல்முக வீதி,
திருகோணமலை. (சி-39194)(33-43-11-16) தொலைபேசி: 026 - 222 3139.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பரிமளகாந்தி சுந்தரலிங்கம்
### (பவளம்)



கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி பரிமளகாந்தி சுந்தரலிங்கம் அவர்கள் 17.11.2004 புதன்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மயில்வாகனம், சிவஞானரத்தினம் (சின்ன ராஜா), வன்னியசிங்கம், ஊரெழு சந்திரசேகரம் (தேவர்), புஸ்பராணி, சரஸ்வதி, லீலாவதி ஆகியோரின் சகோதரியும் லோகேஸ்வரன் (வரன்-சுவிஸ்), ஜீவமனோகரன் (ஜீவா-சுவிஸ்), வனிதா (கொழும்பு), ஸ்ரீதரன் (கனடா), சுசீலா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜீவரஞ்சினி, புஸ்பலீலா, பாரதி, குலபாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் வஜீகரன், பிரேனி, ஜெஷான்ந், சரண், ஜிந்தன், பயானா, கவின், கௌரிக்கா, லாவண்யா, ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2004) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கலட்டி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(38793)(43-11-16-45)

தகவல்:
லோகேஸ்வரன், ஜீவமனோகரன்,
ஸ்ரீதரன் (மகன்மார்).
சச்சிதானந்த சிவம் (சச்சி -மருமகன்)

## திருமதி நடராசா சின்னம்மா

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா சின்னம்மா 18.11.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - முத்தாச்சி தம்பதியின் சிரேஷ்ட மகளும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் சின்னத்துரை, காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் பவளம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தேவராணி, வன்னியசிங்கம் (கோட்டக்கல்வி அலுவலகம், உடுவில்), விஜயகுமார், தேவகுமார் (இந்திரன்), குலேந்திராணி, ஜெயராஜசிங்கம், கமலகுமாரன், மகேந்திரன் (மனோ), வசந்தகுமார், வசந்தராணி, நந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தர்மலிங்கம் (இ.மி.ச.), கமலாவதி, சஞ்சலா, மாலினி, ஜெயசீலன், நளாயினி, ஜிகிர்தா, திரேசா, சியாமளா, யூட்தேவராஜன், கமலேந்திரன் (இந்திரன்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை [illegible] அறிவிக்கப்படும்.

22, புராடி லேன்,
அரியாலை. (38796)(43-11-16-45)

தகவல்:
தேவராணி, வன்னியசிங்கம்,
இந்திரன் (பிள்ளைகள்).

# கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அம்பேபிட்டிய தமது இல்ல முன்றிலில் வைத்துச் சுட்டுக்கொலை!

## பாதாள உலகக் கோஷ்டியின் கைவரிசை எனச் சந்தேகம்

கொழும்பு,நவ.20

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய நேற்றுக் கொழும்பில் தம்து உத்தியோகபூர்வ இல்லத்தின் முன்றிலில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது மெய்ப் பாதுகாவலரான பொலீஸ் அதிகாரி ஒருவரும் அச்சம்பவத்தில் உயிரிழந்தார்.

பாதாள உலகக் கோஷ்டியினருக்கும் போதைவஸ்துக் கும்பல்களுக்கும் எதிராகக் கடும் போக்கைக் காட்டி வந்த சரத் அம்பேபிட்டிய நேற்றும் போதைவஸ்து வைத்திருந்த ஒரு பெண்ணுக்கு ஆயுள் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். அதை முடித்துக்கொண்டு திரும்பி வந்து வீட்டில் இறங்கிய சமயமே அவர் துப்பாக்கிதாரிகளின் வேட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு எதிரான - இலங்கை மத்திய வங்கி மீதான குண்டுத் தாக்குதல் வழக்கில் - பிரபாகரனுக்கு 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தவர் இந்த நீதிபதியே என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேற்று அவர் தனது மெய்ப்பாதுகாவலர் சகிதம் கொழும்பு கறுவாக்காட்டில் - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்திறகு அருகில் - சரணா மாவத்தையில் நீதிபதிகளுக்கு ஒதுக்கப்பட்ட இல்லங்களுக்கான பிரதேசத்தில் உள்ள தமது வீட்டில் - வந்திறங்கிய போது - பிற்பகல் 3.15 மணியளவில் - துப்பாக்கிதாரிகள் அவரது வீட்டு வாசலில் வைத்துத் திடீர் தாக்குதல் நடத்தினர்.

காரைவிட்டு இறங்கிய சமயம் சூட்டுக்கிலக்கான நீதிபதி சரத் அம்பேபிட்டிய அந்த இடத்திலேயே - கராஜில் விழுந்து உயிரிழந்தார்.

வீட்டு வாசலில் அவரது மெய்ப்பாதுகாவலர் இரத்த வெள்ளத்தில் உயிரிழந்துகிடந்தார்.

தாக்குதல் நடத்தியோர் 252-0882 இலக்க வெள்ளை நிற 'மெஸ்டா' வாடகைக் 'கப்' வாகனத்தில் தப்பிச்சென்றனர் என்றும் -

அந்த வாகனத்தில் வாடகைக் கார்களைச் சேவைக்கு விடும் நிறுவனத்தின் 871871 என்ற தொலைபேசி இலக்கம் பெரிதாக எழுதப்பட்டிருந்தது என்றும் -.

பொலீஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிதாரிகள் தாக்குதல் நடத்தப் பயன்படுத்திய வாகனமும், பின்னர் அவர்கள் தப்பிச்செல்லப் பயன்படுத்திய வாகனமும் பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

நீதிபதி சரத் அம்பேபிட்டிய முக்கியமான - சர்ச்சைக்குரிய - பல வழக்குகளில் கடுமையான - அதியுச்ச - தீர்ப்பை வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தமிழ்க் கைதிகள் 25 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் சம்பந்தபபட்ட முகாமுக்குப் பொறுப்பான இரு பொலீஸ் அதிகாரிகளுக்கு மரண தண்டனைத் தீர்ப்பை வழக்கியவர் இவரே.

எனினும், இந்த வழக்கின் மேன் முறையீட்டின் ஆரம்பத்திலேயே ஒரு பொலீஸ் அதிகாரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரபல தமிழ் கோடீஸ்வரர் ஒருவர், தமது 12 வயது மகளை பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தினார் எனக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் கடந்த மாதம் எதிரிக்கு 36 வருட சிறைத் தண்டனையும், ஒரு கோடி ரூபா நஷ்ட ஈட்டுத் தொகையை விதித்த நீதிபதி சரத் அம்பேபிட்டிய, நஷ்டஈட்டுத் தொகையை செலுத்தத்தவறினால் மேலும் 12 வருடங்கள் சிறையிலிருக்கவேண்டும் என்றும் பணித்திருந்தார்.

நேற்றும்கூட, 45கிராம் ஹெரோயின் வைத்திருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் குனுதிரேஸா என்ற பெண்ணுக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தார்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரி ஒருவர், மேற்படி நீதிபதியின் படுகொலை, சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளைத் தடுக்கும் தங்கள் முயற்சிக்கு பேரிடி எனத் தெரிவித்தார்.

1996 ஆம் ஆண்டு ஜனவரியில் 91 பேர் உயிரிழக்கவும், 1,400 பேர் காயமடையவும் காரணமாக இருந்த கொழும்பு மத்திய வங்கிக் குண்டுத் தாக்குதல் வழக்கை இவரே விசாரணைசெய்தார். இந்த வழக்கில் எதிரியாக குற்றஞ்சுமத்தப்பட்ட புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இன்றியே அந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி சரத் அம்பேபிட்டிய, பிரபாகரனுக்கு 200 ஆண்டுகால சிறைத் தண்டனை விதித்தார். இந்த வழக்கில் புலிகளின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டுஅம்மானுக்கு எதிராகவும் இதேபோன்றதொரு தீர்ப்பு வழக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாதாளக் கோஷ்டியினர், போதைவஸ்துக் கடத்தல் குழுவினர் போன்றோருக்கு எதிராக தயவு தாட்சண்யமின்றி கடும் தீர்ப்பை வழங்கி வந்த நீதிபதி அமபேபிட்டிய அதன் காரணமாக பாதாள உலகக் குழுவினரின் கைவரிசைக்குப் பலியானார் என்று கருதப்படுகின்றது.

(ஐ-க-12)

## யாழ். மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலை வெறியாட்டத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன் இது ஒரு திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலையென்றே நாம் கருதுகின்றோம். இக்கொலைச்சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் இராணுவ மினி முகாம்களும் காவலரண்களும் அமைந்துள்ளன. அடிக்கடி இராணுவ வதி ரோந்துகளும் இடம்பெற்று வருகின்ற சூழ்நிலையில் இந்த வீதியால் பகிரங்கமாக துப்பாக்கிதாரிகளால் எவ்வாறு நடமாடமுடியும்? எனவே, இச்சம்பவமானது ஒரு திட்டமிட்ட கொலையாகும். அத்துடன், இக்கொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் தீவிர இராணுவக் கண்காணிப்பில் இருந்து எவ்வாறு தப்பிப் போக முடியும்? எனவே, இப்பகுதியில் நடந்த இக்கொலைச் சம்பவங்களுக்கு சிறிலங்கா படைத் தரப்பே பொறுப்பேற்கவேண்டும்.

அப்பாவிகள் மீதான கொலைச் சம்பவங்கள் இனியும் தொடராமல் நிறுத்தப்படல் வேண்டும். இதற்கு காரணமானவர்களை உடன் கண்டுபிடித்து கைதுசெய்து நீதியின் முன் நிறுத்த வேண்டும். இச்சம்பவமானது சமாதானத்தை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் மக்களின் மனங்களைக் கொதிப்படைய வைத்துள்ளதுடன் மக்களின் எதிர்பார்ப்புக்களை தவிடுபொடியாக்கியுள்ளது. சமாதானத்திற்கான சூழலையும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ளது.

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வல்லை சிதம்பரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களில் இருவர் குண்டு பாய்ந்து துடிதுடித்து வீழ்ந்தனர் என்றும் -

தாக்குதல் நடத்திய ஆயுததாரிகள் ஆலடிப் பகுதியூடாக மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்று மறைந்தனர் என்றும் -

கூறப்படுகிறது.

வல்லை சிதம்பரா மைதானத்தின் ஒரு பக்க எல்லை அருகே படைமுகாம் அமைந்துள்ளது. மைதானத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் பொலீஸ் நிலையமும் உள்ளது.

மைதானப் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டு நீண்ட நேரத்தின் பின்னரே படையினரும் பொலீஸாரும் அந்தப் பகுதிக்கு வந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படையினரும் பொலீஸாரும் வந்து குவிந்ததால் அங்கு பெரும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. சம்பவம் நடந்த இடத்துக்கு எவருமே செல்ல அனுமதிக்கப்படவில்லை. பின்னர் உயிரிழந்த இரண்டு இளைஞர்களினதும் சடலங்கள் அங்கிருந்து எடுத்துச்செல்லப்பட்டு ஊறணி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

ஆதிகோவிலடியைச் சேர்ந்த சதாசிவம் குமரன் (வயது-16), இராஜேந்திரம் சுரேஸ் (வயது-19) ஆகிய இரு இளைஞர்களுமே உயிரிழந்திருக்கின்றனர்.

மைதானப் பகுதியில் நின்றிருந்த பொன்னுத்துரை தெய்வேந்திரம் என்பவர் காயமடைந்தார்.

நேற்றைய சம்பவம் தொடர்பாகத் தாங்கள் விசாரணைகளை நடத்தி வருவதாக வல்வெட்டித்துறை பொலீஸார் தெரிவித்தனர்.

ஊறணி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சடலங்கள் இன்று மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மாவீரர் தினம் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாள் என்பனவற்றைக் கொண்டாடுவதற்கு மிகப்பெரியளவிலான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவரும் சமயத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது வடமராட்சி மக்கள் மத்தியில் பரப்பரப்பையும் பீதியையும் உருவாக்கியிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த தினத்தை - வெகு விமரிசையாக - தேசிய விழாவாக - கொண்டாடுவதற்கு வல்லை மற்றும் ஆதிகோவிலடிப் பகுதி இளைஞர்கள் ஏற்பாடுகளைச் செய்துவந்தனர்.

(ஐ-70-173-12)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் நோக்கமாகும் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இந்தக் கொலை வெறியாட்டம் இராணுவப் பின்னணியுடன் நடத்தப்படுவது தெரிகிறது. கொலைச் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்துள் மினி இராணுவ முகாம்கள், காவலரண்கள் என்பன அமைந்துள்ளன. இராணுவ ரோந்துகளும் அடிக்கடி இடம்பெறுகின்றன. எனவே, இராணுவத்திற்கு தெரியாமல் எதுவும் நடக்கமுடியாது. இராணுவம் ஒரு தலைப்பட்சமாக யுத்தமுஸ்தீபுகளில் ஈடுபடுமானால் எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும். இவ்வாறான படுகொலைகளை நாம் அனுமதிக்கமுடியாது. இந்தப் படுகொலைச் சம்பவத்தை கண்டித்து இன்று குடாநாடு தழுவிய பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு யாழ்ப்பாண மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது. (ஐ-12)

## பஸ் விபத்தில் 35 பேர் காயம்!

கொழும்பு,நவ.20

கண்டி லேவெல்லப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் 35 பேர் காயங்களுக்குள்ளாகினர். அவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

லெவெல்லேயில் இருந்து கண்டி நோக்கிச் சென்ற பஸ் வளைவு ஒன்றில் திரும்பும் போது பள்ளத்தாக்கினுள் வீழ்ந்தது என்று பொலீஸார் கூறினர். (ஐ-12)

## எம்.பி. வீட்டில் கைக்குண்டு

ஐக்கிய தேசிய முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவங்சவின் வீரபுவவில் உள்ள வீட்டுப் பூந்தோட்டத்திலிருந்து கைக்குண்டொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

தோட்டத்தில் குண்டு வைக்கப்பட்டிருந்தது என்ற தகவல் வீட்டு வேலைக்காரர் மூலம் பொலீஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அந்தக் குண்டு, பின்னர் குண்டு செயலிழக்கசெய்யும் பிரிவினரால் செயலிழக்கச் செயப்பட்டது. இது தொடர்பாக விசாரணைகளை பொலீஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(ஐ-12)

## திருமலையில் ஆயுதங்கள் மீட்பு

திருகோணமலை மூதூர் தர்ஹா நகரில் நேற்றுமுன்தினம் மாலை ஒரு தொகுதி ஆயுதங்கள் பொலீஸாரால் கண்டெடுக்கப்பட்டன. நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த இவற்றைப் பொலீஸார் தோண்டி எடுத்தனர்.

ரி-56 ரகத் துப்பாக்கி -01, எஸ்.எல்.ஆர்.ரகத் துப்பாக்கி -01, எஸ்.எம்.ஜி.ரகத் துப்பாக்கி -01, கிரனேட்டுக்கள்-08, துப்பாக்கி ரவைகள் - 400 அவற்றுக்கான மகசீன்கள் என்பன கைப்பற்றப்பட்டன என மூதூர்பொலீஸார் தெரிவித்தனர். மூதூர் ஆற்றோரம் இவைபுதைக்கப்பட்டிருந்தன எனவும், பொது மக்களிடம் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டன எனவும் பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-12)

## கோட்டைப் பகுதியில் மிதிவெடிகள்

யாழ். கோட்டையைச் சுற்றியுள்ள பகுதியில் மிதிவெடிகள் தொடர்பான எச்சரிக்கைப் பலகைகள் நடப்பட்டுள்ளன.

யாழ். மாநகராட்சி மன்ற தொழிலாளர்கள் இந்தப் பகுதியை அண்மையில் துப்புரவு செய்த சமயம் மிதிவெடிகள் காணப்பட்டதை அடுத்து துப்புரவுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

இந்தப் பகுதியில் மிதிவெடிகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

அதற்கு முன்பாக அங்கு மிதிவெடி எச்சரிக்கைக் குறியீடு பொறிக்கப்பட்ட பலகைகள் இடப்பட்டுள்ளன. (ஐ-17)

## மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படவுள்ளன. மக்கள் தமது வீடுகளுக்கு முன்பாக உள்ள வீதிகளைத் துப்புரவு செய்யும் பணியிலும் ஈடுபடுவார்கள்.

இம்முறை என்றுமில்லாதவாறு மாவீரர் நாளை உணர்வுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.(ஐ-13)


## இதோ வெளிவந்துவிட்டது

சீவம் வெளியீடான வர்த்தக, விளம்பர கலண்டர்கள், டயறிகள், பொக்கட் கலண்டர்கள் அனைத்தும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

விளம்பரங்கள் அச்சிடகொடுக்கும் வியாபாரிகள் நேரிலே வந்து உடன் பதிவுசெய்து கொள்ளவும்.

கொழும்பு விலையில் அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

*மக்மிலன் புத்தக சாலை, இல.3 பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.*

சிறிகாந், புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(சீ-39198) (30-11-16)

Walk In-Interview

## VACANCIES FOR IT PROFESSIONALS

**IT Lecturers**

Lecturers in Computer applications, Information Systems, Software Development, Networks, Database Systems, System Analysis & Design are required.

**Computer Technician**

நல்ல தொடர்பாடல் திறன்மிக்கவர்களும் கணனித் தேர்ச்சியாளர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

Interviews on : 20th November 2004 & 21st November 2004
9.00 a.m. - 4.00 p.m. (தயவு செய்து உங்கள் சுய விவரக்கோவையையும் சான்றிதழ்களின் பிரதிகளையும் கொண்டுவரவும்)

*யுனிவென்சல் நிறுவனம், இல.55, மாட்டீன் றோட், யாழ்ப்பாணம்.*
*T.P.: 0777 918280*

(சீ-39185)(30-16-45)

அமெரிக்கா LOTTERY விசா விண்ணப்பிக்க தொடர்பு கொள்க

SKY COMPUTERS (PVT) LTD.
No,89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021-4590325 : fax: 021-4590325

Diploma in HardwareTechnology

3Months 3000/=

புதிய பிரிவுஆரம்பம் 22.11.2004

| | | |
|---|---|---|
| MS Office | 3Months | 1500/= |
| MS - Word | 1Month | 500/= |
| MS - Excel | 1Month | 500/= |
| MS - Access | 1Month | 500/= |
| MS - Power Point | 1Month | 500/= |

Windows Internet, E-Mail Hard ware Introduction

(E - mail : skycom@wow.lk)
(கச்சேரிக்கு அருகில்)

Today you learn Tomorrow you lead


# மரண அறிவித்தல்கள்

## செல்லையா சிவகுரு

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வசித்தவருமான செல்லையா சிவகுரு அவாகள் நேற்று (19.11.2004) வெள்ளிக கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சிவகுரு - தேவமலரின் அன்புக் கணவரும் செல்லையா-மீனாட்சியின் அன்பு மகனும் சி.சிவனேஸ்வரன் (லண்டன்), சி. சிவேஸ்காந்தா (லண்டன்), சி.சிவரூபன் (லண்டன்), வ.சிவனேஸ்வரி (லண்டன்), சு.பாஸ்கரி (கொழும்பு) ஆகியோரின் தந்தையும் P.வரதன் (லண்டன்), P.சுவேந்திரா (கொழும்பு) ஆகியோரின் மாமனும் கந்தசாமி, அமுதாம்பாள் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2004) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு 21, வவுசல் பிளேஸ், வெள்ளவத்தையில் நடைபெற்றுப் பூதவுடல் கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: புதல்வர்கள்.

(சி-39199)(30-11-16)

## வல்லிபுரம் கிருஷ்ணசாமி

### (கிருஷ்ணசாமி கராச் உரிமையாளர்)

மீனாட்சி அம்மன் கோயிலடி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கிருஷ்ணசாமி அவர்கள் நேற்று (19.11.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக வசிப்பிட முகவரி: காளிகோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.*

தகவல்: குடும்பத்தினர்.

(30-11-16)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.